# சுற்றுலா அபிவிருத்தி பிரதேசங்கள் மற்றும் சுற்றுலா அபிவிருத்தி செயற்திட்டங்கள் சுற்றுலா கைத்தொழிலுக்கு பங்களித்தல் தொடர்பான செயலாற்றல் கணக்காய்வு.




**அறிக்கையின் இலக்கம் : TIP/A/SLTDA/02/22/PA**

**தேசிய கணக்காய்வு அலுவலகம்**

## உள்ளடக்கம்


| | | விபரம் | பக்க இலக்கம் |
|---|---|---|---|
| 1. | | நிறைவேற்றுப் பொழிப்பு | 01 |
| 2. | | அறிமுகம் | 03 |
| | 2.1 | பின்புலம் | 03 |
| | 2.2 | கணக்காய்வு நோக்கம் மற்றும் அளவுகோள்கள் | 07 |
| | 2.3 | கணக்காய்வு விடயப் பரப்பு மற்றும் பரப்பெல்லை | 10 |
| | 2.4 | கணக்காய்வின் நுழைவு | 11 |
| | 2.5 | கணக்காய்வு முறைமை | 12 |
| | 2.6 | கணக்காய்விற்கான அதிகார பலம் | 12 |
| 3. | | விரிவான கணக்காய்வு அவதானிப்புக்கள் | 13 |
| | 3.1 | சுற்றுலா அபிவிருத்தி பிரதேசங்களை இனங்காணல் மற்றும் அபிவிருத்தி செய்தல் | 13 |
| | 3.2 | சுற்றுலா அபிவிருத்தி செயற்திட்டங்களின் செயலாற்றல் | 17 |
| 4. | | பரிந்துரை | 35 |
| | | இணைப்பு | 37 |

## 01. நிறைவேற்றுப் பொழிப்பு

சுற்றுலா கைத்தொழில் மூலம் இலங்கைக்கு கிடைக்கின்ற அந்நியச் செலாவணி தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுடன் அதிக முக்கியத்துவமாக இருந்ததுடன் அந்த அந்நியச் செலாவணி உழைத்தலை உயர்வடையச் செய்யும் நோக்கில் சுற்றுலாக் கைத்தொழில் மற்றும் அது சார்ந்த கைத்தொழில் துறைகளுக்குரிய கொள்கை ரீதியான திட்டமிடல், அமுல்படுத்துதல், வசதிகளை வழங்குதல், கைத்தொழிலை முறைமைப்படுத்துதல், ஒழுங்குபடுத்துதல், சுற்றுலா அபிவிருத்தி வலயங்களை இனங்காணல் மற்றும் அதிலுள்ள வசதிகள் மற்றும் சேவைகளை மேம்படுத்தும் பணிப்பொறுப்புக்கள் என்பன 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறை அலுவல்கள் சட்டத்தின் பிரகாரம் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

சுற்றுலாக் கைத்தொழிலை கட்டியெழுப்புவதற்காக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் அமுல்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி செயற்திட்டங்களின் செயலாற்றலை மதிப்பிடுதல் இந்த கணக்காய்வின் அடிப்படை நோக்கமாக இருந்ததுடன் அதன் போது அதிகார சபையால் 1987 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான பல்வேறு காலப் பகுதிகளின் போது வெளியிடப்பட்டிருந்த சுற்றுலா அபிவிருத்தி பிரதேசங்கள் 14 மற்றும் யால, கற்பிட்டி, குச்சவெளி, தெத்துவ மற்றும் பாசிக்குடா என்ற பிரதேசங்களில் மேற்கொள்ளப்படுகின்ற சுற்றுலா அபிவிருத்தி செயற்திட்டங்களின் செயலாற்றல் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் பின்னர் சுற்றுலா அபிவிருத்தி பிரதேசங்களை இனங்காணாமை, சட்டத்தின் பிரகாரம் சுற்றுலா அபிவிருத்தி பிரதேசங்களுக்கு உரிய நியமங்கள் தயாரிக்கப்படாமை மற்றும் கவர்ச்சிகரமான சுற்றுலா இடங்களை இனங்காணாமை, சுற்றுலா அபிவிருத்தி பிரதேசங்களில் சுற்றுலா பயணிகளுக்காக ஏற்படுத்தப்பட வேண்டிய சுற்றுலா தகவல் நிலையங்கள் நிர்மாணித்தல், நுழைவு வீதிகள், வீதிகளின் இருபக்கமும் மின்சார விளக்கு முறைமை, பார்வையிடல் மேடை, நீர் வசதிகள், சிற்றுண்டிச்சாலை, வாகனத் தரிப்பிடம், கழிவகற்கும் வசதிகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை உள்ளடக்கிய ஏனைய பௌதீக வசதிகள் ஸ்தாபிக்காமை மற்றும் சுற்றுலா பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக போதியளவான கவனம் அதிகாரசபையினால் செலுத்தப்படாமை, சுற்றுலா அபிவிருத்தி பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றுலா செயற்பாடுகள் மற்றும் வியாபார நிலையங்கள் தொடர்பாக மதிப்பீட்டிற்கு உட்படுத்தி தனியார் துறையுடன் தொடர்புபட்டு வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை, சுற்றுலா அபிவிருத்தி பிரதேசங்களில் வசதிகளை ஏற்படுத்துதல் தொடர்பாக அதிகார சபையின் நேரடியான நிதி ஏற்பாட்டின் அடிப்படையிலும், உரிய நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி செலவினங்கள் மேற்கொள்ளப்படாமை / பயனற்று இருந்தமை, கற்பிட்டித் தீவுகளில் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்ட நிறுவனங்களை தெரிவு செய்யப்பட்ட முறைமை தெளிவுபடுத்தப்படாமை, காலரீதியில் வாடகைப் பணம் அறவிடப்படாமை, கற்பிட்டி காணி முதலீட்டு நடவடிக்கைகளுக்காக அனுப்புவதற்கு 09 வருடங்கள் முதல் 11 வருடங்கள் வரையான காலம் எடுத்திருந்தமை, வாடகையாளர்கள் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை, யால பிரதேசத்திற்குரிய முதலீட்டாளர்களினால் சுற்றாடல் சான்றிதழ் பெறப்படாமை, யால நிர்மாணத் திட்ட முறைமை பசுமை மயத்திற்கு இணங்காமை, திட்டமிடப்பட்ட பிரகாரம் சுற்றுலா அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளாமை மற்றும் அந்த செயற்திட்டங்கள் உரியவாறு மேற்பார்வை செய்யப்படாமை, செயற்திட்டத்திற்காக காணியினை ஒதுக்குதல் மற்றும் அனுமதியற்ற நுழைவுகளை தடுப்பதற்கு போதியளவான கவனம் செலுத்தாதிருந்தமை போன்ற விடயங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.


மேலே காண்பிக்கப்பட்ட அவதானிப்புக்களுக்கான தீர்வாக 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் சட்டத்தின் 26(1) இன் பிரிவின் பிரகாரம் சுற்றுலா அபிவிருத்தி பிரதேசமாக வெளியிடுதல் அதிகார சபையின் பரிந்துரையின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் சட்டத்தின் 26(3) இன் பிரிவின் பிரகாரம் சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசமொன்று உள்ளடக்கக்கூடியதா என சுற்றுலா அலுவல்கள், வணிக மற்றும் ஏனைய நடவடிக்கைகளைத் தீர்மானித்து கட்டளை வழங்க வேண்டியிருந்தமை மற்றும் சுற்றுலாத்

தாரிகளினால் கவர்ச்சிகரமான இடங்களும் அதில் உள்ளடங்கியிருத்தல் வேண்டும். அவ்வாறே இனங்காணப்பட்ட சுற்றுலா அபிவிருத்தி வலயங்களுக்குரிய புதிய வசதிகளை ஸ்தாபிப்பதற்கோ அல்லது காணப்படுகின்ற வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கோ போதியளவான கவனம் செலுத்த வேண்டியிருந்ததுடன் சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசத்தில் வசதிகளை ஏற்படுத்துதல் தொடர்பாக அதிகாரசபையின் நேரடி நிதி ஏற்பாட்டின் அடிப்படையிலும், உரிய நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களை நெருக்கமாக மேற்பார்வை செய்து அவற்றை ஆக்கபூர்வமானதாக அமுல்படுத்தி சுற்றுலா வசதிகளை கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். மேலும் சுற்றுலா அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் காணிகளை வாடகைக்கு வழங்கும் போது முதலீட்டாளர்கள் முறையான திட்டமுறைமையின் பிரகாரம் தெரிவு செய்ய வேண்டியிருந்ததுடன் முதலீட்டாளர்கள் முகங்கொடுக்கின்ற வாடகைக் காணியின் குடியிருப்பாளர்கள் தொடர்பான பிரச்சினைகள், அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளுதல் தொடர்பான பிரச்சினைகள், முதலீட்டு விண்ணப்பப் பத்திரங்கள் சமர்ப்பித்தலில் பிரச்சினைகள் போன்றவைகளுக்காக அதிகாரசபையினால் போதியளவான கவனம் செலுத்துதல் வேண்டும். முதலீட்டு ஆதனங்கள் தொடர்பாக போதியளவான பிரகாரம் திட்டங்கள் தயாரிக்க வேண்டியிருந்தமை மற்றும் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ள வேண்டியிருந்தமை போன்ற முதலீட்டாளர்களினால் வாடகைக்கு எடுக்கப்பட்ட ஆதனங்களில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் அவற்றைப் பேணிச் செல்லுதல் தொடர்பான போதியளவான பிரகாரம் மேற்பார்வை செய்து நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு உரியவாறு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். எனினும் ஏனைய அரசாங்க நிறுவனங்களுடன் சிறந்த தொடர்பினை பேணிச் செல்வதன் மூலம் சுற்றுலா பிரயாணிகளுக்கான வசதிகள் மற்றும் கவர்ச்சியினைக் கட்டியெழுப்புதல், குறைவாகப் பயன்படுத்தப்படுகின்ற முதலீட்டு ஆதனங்களில் முதலீட்டு செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ள வேண்டியிருந்தமை, உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காத முதலீட்டு ஆதனங்கள் உடன்படிக்கை இரத்துச் செய்து சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தமை மற்றும் நட்டத்தை அறவிட வேண்டியிருந்தமை, முதலீட்டாளர்களால் உரிய சான்றிதழ் கிடைக்கப்பெற்றதா என மேற்பார்வை செய்ய வேண்டியிருந்தமை மற்றும் முதலீட்டு ஆதனங்களில் சுற்றுலா அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக ஒதுக்குவதற்கும், காணிகளுக்காக அனுமதியற்ற நுழைவதைத் தடுப்பதற்கும் அதிகார சபை நடவடிக்கை எடுப்பதன் மூலம் இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்கு சுற்றுலா அபிவிருத்தி பிரதேசங்கள் மற்றும் செயற்திட்டத்தில் பங்களிக்கக்கூடியதாக உள்ளது.

## 02. அறிமுகம்

### 2.1 பின்புலம்


தேசிய பொருளாதாரத்திற்கு மூன்றாவது கணிசமான ஏற்றுமதி வருமானமொன்றை சேகரிக்கின்ற சுற்றுலாக் கைத்தொழிலுக்கு நேரடியாக மற்றும் மறைமுகமாக வேலைவாய்ப்பு வசதிகள் அநேகமானவை உருவாக்கப்பட்டு நேரடியாக அந்நியச் செலாவணி சந்தர்ப்பங்களை மேம்படுத்துகின்ற இலங்கையின் விஷேடமாக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு துறையாகும். 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 2.4 மில்லியன் மற்றும் 1.9 மல்லியன் வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகள் இலங்கையைப் பார்வையிடுவதற்கு வருகை தந்திருந்ததுடன் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது முறையே வருகை தந்த வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகளின் எண்ணிக்கை 507,704 மற்றும் 194,495 ஆக வீழ்ச்சியடைந்திருந்த போதிலும் அது 2022 ஆம் ஆண்டின் போது 719,978 வரை உயர்வடைந்து சென்றது. விபரம் கீழே வரைபடத்தில் காண்பிக்கப்படுகின்றது.




வரைபடம் 01 – மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் வருகை

மூலம் - இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

2018 ஆம் ஆண்டின் போது சுற்றுலா தொழில் முயற்சியிலிருந்து ரூபா 711,961 மில்லியன் வருமானம் கேசரிக்கப்பட்ட போதிலும் 2019 ஆம் ஆண்டின் போது அது ரூபா 646,362 மில்லியன் வரை குறைந்திருந்தது. 2020 ஆம் ஆண்டின் போது அந்த வருமானம் 80.78 சதவீதத்தினாலும் அதாவது ரூபா 522,173 மில்லியனாலும் குறைவடைந்தமையால் ரூபா 124,189 மில்லியனாகக் காணப்பட்டது. 2021 ஆம் ஆண்டின் போது அந்த வருமானம் மேலும் குறைவடைந்து ரூபா 100,620 மில்லியனாக இருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டின் போது அந்த வருமானம் ரூபா 362,426 மில்லியன் வரை உயர்ந்திருந்தது. விபரம் பின்வரும் வரைபடத்தில் காண்பிக்கப்படுகின்றது.




வரைபடம் 02 – சுற்றுலா வியாபாரத்திலிருந்து கிடைத்த வருமானம்

மூலம் - இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

சுற்றுலாக் கைத்தொழிலிருந்து 2018 ஆம் ஆண்டின் போது கிடைத்த அந்நியச் செலாவணி வருமானம் ஆன ஐ.அ.டொலர் 4,380.6 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2019 ஆம் ஆண்டில் அந்த வருமானம் ஐ.அ.டொலர் 3,606,9 மில்லியன் வரை குறைவடைந்திருந்தது. 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது அந்த வருமானம் முறையே அ.டொலர் 682.5 மில்லியன் 506.9 மில்லியன் வரை மேலும் குறைவடைந்திருந்தது. எனினும் 2022 ஆம் ஆண்டின் போது அந்த வருமானம் அ.டொலர் 1,136.3 மில்லியனாக காணப்பட்டது.

எனினும் சந்தர்ப்ப சூழ்நிலை மற்றும் நிச்சயமற்ற தன்மை சிக்கலான நிலைமை மற்றும் தெளிவின்மை (Volatilities, uncertainties, complexities and ambiguities) சுற்றுலாத்துறை முகங்கொடுக்கின்ற பொது நிலைமையாக இருந்தமை உறுதிப்படுத்தி 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் 2020 ஆம் ஆண்டில் இருந்து ஒட்டுமொத்தமாக முழு உலகத்திலும் அதிக பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்த கொவிட் தொற்று நோய் நிலைமையின் காரணமாக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது தொடர்ச்சியாக அதிகரிப்பைக் காண்பித்த போதும் சுற்றுலாதாரிகளின் வருகை 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது வீழ்ச்சியடைந்திருந்தது. எனினும் 2022 ஆம் ஆண்டின் போது இந்த நிலைமையில் ஏதே ஒரு அதிகரிப்பை காணக்கூடியதாக இருந்தது.

இலங்கையின் சுற்றுலாத் துறைக்காக 2017-2020 காலப் பகுதியை மேவுகை செய்யும் வகையில் தயாரிக்கப்பட்ட சுற்றுலா உபாயவழித்திட்டம் (Tourism Strategic Plan -TSP 2017-2020) இன் பிரகாரம் **“2025 ஆம் ஆண்டிற்கான இலங்கை மறக்க முடியாத மற்றும் தேவையான மற்றும் பல்வேறு சுற்றுலா அனுபவத்தையும் வழங்குகின்ற நிலையமொன்றாக உட்படுத்துவதை இனங்காணல்”** அதன் நோக்கமாகக் காணப்பட்ட போதும் கொவிட் தொற்றுநோய் நிலைமையில் சுற்றுலாத் துறையில் சகல பிரிவுகளுக்குமுரியதாக நேரடியாக தாக்கமளித்த கைத்தொழில்களை விடுவிப்பதற்காக 2022 முதல் 2025 வரையான காலப் பகுதியில் **“உபாயவழி செயல் முன்னேற்றத் திட்டம் (Strategic Recovery Plan)”** கொண்டு செல்வதற்கு மேற்கொள்ள வேண்டியிருந்தது.

பயன்படுத்தப்படாத திறன்களில் (Untapped potential) அநேகமானவை இலங்கையின் சுற்றுலா கைத்தொழிலுக்கு வருகின்ற சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை மற்றும் முதலீட்டு செயற்திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் சர்வதேச ஆர்வத்தை மேம்படுத்துவதற்கு கணிசமான காலம் தேவைப்பட்டது.

அதன் பிரகாரம் வருகை தருகின்ற சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை, சுற்றுலாக் கைத்தொழிலில் முதலீடுகள் மற்றும் வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களை கட்டியெழுப்புவதற்கும் அதனூடாக தேசிய பொருளாதார விஷேட பங்களிப்பை வழங்குவதற்கும் இலங்கை உள்நாடம்டினைப் உள்நாட்டு ரீதியிலும் சுற்றுலா கைத்தொழிலுக்காக இனங்காண்பதற்கு தேவையான சுற்றாடலை ஏற்படுத்துதல் வேண்டும். இலங்கை சுற்றுலா கைத்தொழிலுக்குரிய கொள்கைகளைத் திட்டமில் அமுல்படுத்துதல் வசதிகளை வழங்குவதற்காக இலங்கை சுற்றுலா அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் அதற்குரிய விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 2.1.1 இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையை ஸ்தாபித்தல்.

சுற்றுலா நடவடிக்கை கைத்தொழில் மற்றும் அதுசார்ந்த கைத்தொழிலுக்குரிய கொள்கை ரீதியான திட்டமிடல் மற்றும் அமுல்படுத்தும் வசதிகளை வழங்குவதற்காக தேவையான ஏதாவது அதிகாரம் அந்த அதிகார சபைக்கு கையளிப்பதற்காக முறையான திட்டமொன்றின் வகையிலும், கைத்தொழில்களை முறைமைப்படுத்துல் மற்றும் ஒழுங்குபடுத்துதலுக்காக பல்வேறு திட்டகளின் அடிப்படையிலும் தேசிய அரசாங்க சபையில் 1966 இன் 10 ஆம் இலக்க தேசிய சுற்றுலா சபை சட்டத்தை நீக்குதல் மற்றும் 1968 இன் 14 ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்தி சட்டத்தின் சில ஏற்பாடுகளை அகற்றுவதற்காக மற்றும் அது தொடர்பாக அல்லது அதற்கு இணைந்த விடயங்கள் தொடர்பாக முறையான திட்ட மொன்றின் வகையிலும் 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் சட்டத்தினால் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக 1987 சனவரி 22 ஆம் திகதிய 1968 இன் 14 ஆம் இலக்க இலங்கை சுற்றுலா அபிவிருத்தி (திருத்த) சட்டத்தின் மூலம் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி வலயத்தில் சுற்றுலா வசதிகள் மற்றும் சேவை மேம்படுத்துதல், திட்டமிடல் மற்றும் ஊக்குவிப்புக்களை வழங்குதல் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி வலயத்தில் சுற்றுலா வசதிகள் மற்றும் சேவைகளை ஒழுங்குபடுத்துதல், பட்டுப்படுத்துதல், பேணுதல் மற்றும் அமுல்படுத்தும் பணிகளும் அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

#### 2.1.1.1 இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் நோக்கு

மறக்கமுடியாத, தேவையான மற்றும் பல்வேறு அனுபவங்களுக்காக உலகம் முழுவதும் சிறந்த தீவாக இலங்கை ஏற்றுக்கொள்வதற்கு ஊக்குவித்தல்.

#### 2.1.1.2 செயற்பணி

இலங்கையின் இயற்கை மற்றும் கலாசார மரபுரிமைகளைப் பின்பற்றுகின்ற மற்றும் சமூக ரீதியில் உள்ளடக்குகின்ற, சுற்றாடல் ரீதியில் பொறுப்புக்கூற வேண்டிய மற்றும் மக்களுக்கும் நாட்டின் பொருளாதார நலன்களுக்கும் வழங்குகின்ற புதுமையான அனுபவங்களைப் பெற்று உயர் பெறுமதியுடன் கொண்டு செல்லுதல்.

#### 2.1.1.3 சட்டத்தின் பிரகாரம் அதன் நோக்கங்கள்

- இலங்கையில் இருந்து மற்றும் வெளிநாட்டில் இருந்து சுற்றுலா மற்றும் சுற்றுலாக் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல்.
- சுற்றுலா மற்றும் சுற்றுலாக் கைத்தொழில்களுக்குரிய அமைச்சரவையினால் வழங்கப்பட்ட கொள்கைகளை உள்ளடக்கி இந்தத் துறைகளுக்குரிய சுற்றுலா அலுவல்கள் விடயப் பொறுப்பு அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல்.

- சுற்றுலா மற்றும் சுற்றுலாக் கைத்தொழில்களாக இலங்கையில் அபிவிருத்தி செய்தல் மற்றும் மேம்படுத்துதல் விற்பனை நடவடிக்கைகள் இலங்கையிலும் வெளிநாட்டிலும் மேற்கொள்வதற்கு சுற்றுலா மேம்பாட்டு பணியகத்திற்கு வழிகாட்டுதல்.
- மனித வளங்களைப் பயிற்றுவிக்கும் நடவடிக்கைகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை பொறுப்பேற்பதற்கு இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்திற்கு வழிகாட்டுதல்.
- இலங்கையின் பொருளாதார அபிவிருத்திற்கும் பரவலாக்குவதற்கும் பங்களிப்பை வழங்கும் நோக்கில் சுற்றுலாக் கைத்தொழில் மற்றும் சுற்றுலா தொடர்பான வியாபாரத் துறைகளைக் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- அவசர சேவைகள் தொடர்பான கைத்தொழில்களை உள்ளடக்கி போதியளவான மற்றும், கவர்ச்சிகரமான மற்றும் செயற்திறனான சுற்றுலா சேவைகளை மேற்கொள்ளக்கூடிய வகையில் அபிவிருத்தி செய்தல் மற்றும் மேம்படுத்துதல்.
- சுற்றுலா கைத்தொழில் மற்றும் அது சார்ந்த ஏனைய கைத்தொழில்களுக்குரிய உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களை அபிவிருத்தி செய்தல், அமுல்படுத்துதல் மற்றும் பேணிச் செல்வதற்காக சுற்றுலா தொழில் முயற்சியாளர்களுக்கு அனுமதிப்பத்திரம் மற்றும் அதிகாரத்தை வழங்குதல்.
- சுற்றுலா கைத்தொழிலை மேம்படுத்துவதற்கும் அந்தக் கைத்தொழிலுடன் தொடர்புடைய முன்னுரிமை நடவடிக்கைகள் மற்றும் பயிற்சி நடவடிக்கைகளுக்கு பங்குபற்றுவதற்கு தனியார் துறையினருக்கும் நபர்களுகளையும் ஊக்குவித்தல்.
- மேலே கூறப்பட்ட நோக்கங்கள் யாவும் அல்லது இதில் சிலவற்றையாவது அடைந்து கொள்வதற்காக தேவையான சாதகமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.

### 2.1.1.4 சட்டத்தின் பிரகாரம் அதன் பணிப்பொறுப்புக்கள்

- அமைச்சரின் அங்கீகாரத்துடன் சுற்றுலா அல்லது சுற்றுலாதாரிகளின் கைத்தொழில்கள் தொடர்பான தொழில் முயற்சி வியாபார நடவடிக்கைகளுக்காக அரசாங்கத்தின் உப முகவராக செயற்படுதல்.
- இலங்கைக்கு வருகை தருகின்ற சுற்றுலா பயணிகளுக்காக வசதிகளை தொடர்ச்சியாக வழங்குதல், அதற்கு உதவியாக இருத்தல் அல்லது மேம்படுத்துதல் மற்றும் சுற்றுலாக் கைத்தொழில்களாக இலங்கையை அபிவிருத்தி செய்தல்.
- சுற்றுலாக் கைத்தொழில்களுடன் தொடர்புடைய சேவைகளை ஸ்தாபித்தல். நடாத்திச் செல்லல் மற்றும் செயற்படுதல் மற்றும் அதன் சேவைகளை சுற்றுலா பயணிகளுக்கு வழங்கும் செயற்பாடுகளை தொடர்புபடுத்துதல்.
- சுற்றுலா மற்றும் அதுசார்ந்த கைத்தொழில்களில் ஈடுபடுகின்ற பல்வேறு தொழில் முயற்சியாளர்களினால் பேணிச் செல்லப்படவேண்டிய நியமங்களை நிர்ணயித்தல், முறைப் படுத்துதல், பேணிச் செல்லல் மற்றும் அமுல்படுத்துதல்.
- அதிகார சபையினால் தீர்மானிக்கப்பட வேண்டிய அளவுகோள்களின் அடிப்படையில் பல்வேறு தொழில் முயற்சியாளர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குதல் மற்றும் அதற்கு உரித்தான நியதிகள் மற்றும் நிபந்தனைகளை நிர்ணயித்தல்.
- ஏதாவது அசையும் மற்றும் அசைவுறாத ஆதனங்களைக் கைப்பெற்றல், பயன்படுத்துதல், வாடகைக்கு எடுத்தல், வாடகைக்கு வழங்குதல், சாட்டுதல் செய்தல் அல்லது முறையற்ற வகையில் அகற்றுதல் எவ்வாறாயினும் அசைவுறாத ஆதனங்களை அகற்றுதல் அமைச்சரின் எழுத்து மூல முன்அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
- அதன் இலக்குகளை செயற்திறனாக நிறைவேற்றும் தேவையை மேவுகை செய்யும் வகையிலும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆலோசனையாளர்களை ஈடுபடுத்தல்.
- தேவை ஏற்படுகின்ற போது சுற்றுலாக் கைத்தொழிலுக்குரிய எந்தவொரு விடயங்கள் தொடர்பாகவும் மாகாணங்களுக்கிடையில் சுற்றுலாதாரிகளை தொடர்புபடுத்தி கட்டி யெழுப்புதல்.

- துணைக் கைத்தொழில்கள் மற்றும் சேவைகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் மேம்படுத்துதல் மற்றும் அதற்குரிய உதவியினை வழங்குதல்.
- சட்டத்தின் நோக்கங்களை முன்னுரிமையாகக் கொண்டு வசதிகளை வழங்குவதற்காக கம்பனி அல்லது ஏனைய சபைகளை ஸ்தாபித்தல்.
- சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக விதிகளை ஈடுபடுத்துதல்.
- இலங்கையிலுள்ள சுற்றுலா பிரயாணிகளில் முக்கியமான இடங்களில் சுற்றுலா மேற்கொண்ட நபர்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்கும் வணிக முயற்சிகளை நடாத்திச் செல்லல்.

## 2.2 கணக்காய்வு நோக்கம் மற்றும் அளவுகோல்கள்.

### 2.2.1 கணக்காய்வு நோக்கம்

சுற்றுலாக் கைத்தொழிலை கட்டியெழுப்புவதற்காக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையால் அமுல்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி செயற்திட்டங்களுக்குரிய செயலாற்றல் மதிப்பீடு இந்த கணக்காய்வின் நோக்கமாகும்.

### 2.2.2 கணக்காய்வு அளவுகோல்கள்

| | உப கணக்காய்வு நோக்கம் | | அளவுகோல்கள் | மூலம் |
|---|---|---|---|---|
| 1.1 | சுற்றுலா அபிவிருத்தி பிரதேசங்களை இனங்காணல் மற்றும் அபிவிருத்தி செய்தலை செயற் திறனாகவும் வினைத்திறனாகவும் மதிப்பிடுதல். | 1.1.1 | சுற்றுலா அலுவல்கள் தொடர்பாக அமைச்சருக்கு அதிகார சபையின் பரிந்துரையின் அடிப்படையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுகின்ற நியதிகளின் மூலம் ஏதாவது பிரதேசமொன்று **"சுற்றுலா அபிவிருத்தி பிரதேசம்"** ஆக முன் வெளியிடுவதற்கான அதிகாரத்தை பெற்றுக்கொள்ளல். | 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவு |
| | | 1.1.2 | சுற்றுலா பிதேசமாக இனங்காணும் தேவையினை உறுதிப்படுத்தி பரிந்துரைகளை உள்ளடக்கி அதிகார சபையினால் அமைச்சருக்கு அறிக்கையிடல். | 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவு |
| | | 1.1.3 | உப கருத்திட்டம் 2017-2020 காலப் பகுதியின் பந்தியின் இலக்கம் 4இல் சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசங்களை இனங்காணல். | கருத்திட்டம் 2017-2020 பந்தி இலக்கம் 04 |

| | | |
|---|---|---|
| 1.1.4 | பௌதீக பரிசோதனையின் மூலம் இனங்காணப்பட்ட கவர்ச்சிகரமான இடங்கள். | 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் சட்டம். |
| 1.1.5 | கருத்திட்டம் 2017-2020 அத்தியாயத்தின் 4 ஆம் இலக்கத்தின் பிரகாரம் சுற்றுலா போக்குவரத்தினை இனங்காணல். | கருத்திட்டம் 2017-2020 பந்தி இலக்கம் 04 |
| 1.1.6 | சட்டத்தின் 26(3) ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேசமொன்றில் உள்ளே மேற்கொள்ள வேண்டிய சுற்றுலா நடவடிக்கைகள் வணிக மற்றும் ஏனைய நடவடிக்கைகளை தீர்மானித்து கட்டளையிட வேண்டியிருந்ததுடன் அந்தப் பிரதேசங்களில் உள்ளடங்கிய சுற்றுலா தாரிகளைக் கவர்ந்த இடங்களாக இனங்காணக்கூடிய வரலாற்று சிறப்புமிக்க அல்லது சுற்றாடல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும் அதன் கட்டளைகளில் உள்ளடக்குதல். | சட்டத்தின் 26(3) ஆம் பிரிவு |
| 1.1.7 | சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசங்களை சுற்றுலா பிரயாணிகளுக்காக ஏற்படுத்தப்பட வேண்டிய வசதிகள் | 1987 இன் 02 ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்தி (திருத்த) சட்டத்தின் 2 ஆம் பிரிவு, 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் சட்டத்தின் 26(3) ஆம் பிரிவு, கருத்திட்டம் 2017 – 2020 அத்தியாயம் இலக்கம் 4, கருத்திட்ட செயல் நடவடிக்கைத் திட்டம் (2020-2023) இல் சுற்றுலா உப திட்டம் இலக்கம் 09 |
| 1.1.8 | சுற்றுலா அபிவிருத்திப் | பணிப்பாளர் சபை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பிரதேசங்களில் வசதிகளை ஏற்படுத்துதல் தொடர்பாக அதிகார சபையின் நேரடியான நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் மற்றும் உரிய நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி செலவினங்களை (Development cost) செயலாற்றல் மதிப்பீடு | அங்கீகாரம், செயல் நடவடிக்கைத் திட்டம் 2020, 2021, 2022 |
| 1.2 | சுற்றுலா செயற்திட்டங்களில் செயலாற்றல் மற்றும் செயல் முன்னேற்ற மதிப்பீடு. | 1.2.1 | தகுதியான இடங்களை இனங்காணல், கைப்பெற்றும் செயற்பாடுகள் மற்றும் செயற் திட்டத்திற்காக ஒதுக்குதல் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் மேற்கொள்ளல். | 1979 இன் 43 ஆம் இலக்க காணி கையளித்தல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டம், 1950 இன் 09 ஆம் இலக்க காணி கைப்பற்றல் சட்டத்தின் 460 ஆம் அதிகாரம், 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவு, அமைச்சரவைத் தீர்மானம், சாத்தியவள ஆய்வு அறிக்கை, பிரதான திட்டம் |
| | | 1.2.2 | செயற்திட்டங்களை இனங்காணல், முதலீட்டாளர்களை கவருதல் மற்றும் தெரிவு செய்தல். | அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் பணிப்பாளர் சபை தீர்மானம், முதலீட்டா ளர்களை தெரிவு செய்வதற்கான முதலீட்டு கைநூல் (Investor handbook) முதலீட்டாளர்களுக்கு அங்கீகாரம் வழங்கும் செயற்பாடு, செயற்திட்ட முன்மொழிவு மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரை, பிரதான |

| | | |
|---|---|---|
| | | திட்டம், கூட்டிணைந்த திட்டம் 2020-2025 கருத்திட்ட இலக்கம் 2.2, கூட்டுடிணைந்த திட்டம் (2020-2023) இலக்கம் 2.5 |
| 1.2.3 | செயற்திட்டத்தில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய உட்கட்டமைப்பு வசதிகளை உள்ளடக்கிய ஏனைய வசதிகளை இனங்காணல். | பிரதான செயல் நடவடிக்கைத் திட்டம் (2020, 2021, 2022) |
| 1.2.4 | முதலீட்டாளர்களுக்கு காணியினை வாடகைக்கு வழங்குதல், முதலீட்டாளர்களின் செயற் திட்டத்தை அமுல்படுத்துதல் மற்றும் அதிகார சபையின் மேற்பார்வை. | பிரதான திட்டம் வாடகை உடன்படிக்கை கூட்டிணைந்த திட்டம் (2020-2022) பந்தி இலக்கம் 9.4 |
| 1.2.5 | முதலீட்டாளர்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதும் செயற்பாட்டு நடவடிக்கைகள் அமுல்படுத்தப்படாத காணிகள் மற்றும் வாடகைக்கு வழங்காத காணிகள் தொடர்பாக அதிகார சபை நடவடிக்கை எடுத்தல். | பணிப்பாளர் சபைத் தீர்மானம், வாடகை உடன்படிக்கைகளில் நிபந்தனை. |

## 2.3 கணக்காய்வு விடயப்பரப்பு மற்றும் பரப்பெல்லை.

சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசமாக அதிகார சபையினால் வெளியிடப்பட்டுள்ள வலயங்கள் மற்றும் அதிகார சபைக்குச் சொந்தமான காணிகளில் அமுல்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி செயற்திட்டங்கள் சுற்றுலா கைத்தொழிலின் செயல்முன்னேற்றத்தில் காண்பிக்கின்ற பங்களிப்பு மாத்திரம் இந்தக் கணக்காய்வின் போது மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்தது. இதன் போது அதிகாரசபையால் வெளியிடப்பட்ட சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசங்கள் 14 மற்றும் யால, கற்பிட்டி, குச்சவெளி, தெத்துவ மற்றும் பாசிக்குடாவில் அமைந்துள்ள அபிவிருத்தி செயற்திட்டங்களின் செயலாற்றல் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

**விடயப் பரப்பின் வரையறை**

i. சுற்றுலாக் கைத்தொழில் தொடர்பாக தேசிய கொள்கையொன்றை வெளியிடாதிருந்தமை.

ii. சுற்றுலா பிரதேசமாக பேரிடப்படவேண்டியிருந்த போதும் இதுவரை பேரிடப்படாத பிரதேசங்கள் காணப்படுகின்றதா என இனங்காணாமை.

iii. சுற்றுலா கைத்தொழிலில் குறிப்பிடப்பட்ட அளவிடைத் தகவல்கள் காணப்படாமை.

iv. சுற்றுலா பிரதேசத்திற்காக வலய திட்டங்கள் தயாரிக்கப்படாமை.

v. சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசம் தொடர்பான செலவின அறிக்கை உரிய பிரகாரம் காணப்படாமை.

vi. சகல காணிகளையும் உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட காணிப் பதிவேடொன்று காணப்படாமை

vii. செயற்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்ட சகல முதலீட்டாளர்கள் தொடர்பாகவும் பரிசோதனைகள் மேற்கொள்ளாமை.

viii. சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசமாக நிர்ணயிப்பதற்கு முறையான திட்ட முறைமையொன்று காணப்படாமை.

## 2.4 கணக்காய்வின் நுழைவு

அ. 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் 6.1 (அ) மற்றும் (ஆ) பிரிவுகளின் பிரகாரம் சுற்றுலா அபிவிருத்திக்காக உத்தேசிக்கப்பட்ட நீண்டகால இலக்குகள் மற்றும் நான்கு வருடத்திட்டம் என்பன தயாரித்து அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்படவேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டில் இருந்து சுற்றுலாக் கைத்தொழிலுக்காக சர்தேச கொள்கையொன்றை தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அது இறுதிக் கட்டத்தில் காணப்பட்டது. அதன் பிரகாரம் நாட்டில் தற்போது காணப்படுகின்ற கடுமையான பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து விரைவாக மற்றும் குறுகிய காலத்தில் அந்த வழியொன்றாக சுற்றாடல் கைத்தொழில் தொடர்பான தேசியக் கொள்கை, இலக்குகள் மற்றும் திட்டங்களின் தேவையை கவனத்திற் கொள்ளல் அத்தியாவசியமாக இருந்தமை.

ஆ. 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முறையே 2.4 மில்லியன் மற்றும் 1.9 மில்லியன் வெளிநாட்டு சுற்றுலா பிரயாணிகள் தரப்பொன்று இலங்கையைப் பார்வையிட வருகை தந்திருந்ததுடன் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டு வரையில் இந்த நிலைமை முறையே 507,704 மற்றும் 194,495 வரை குறைவடைந்திருந்தமையால் கைத்தொழில் ஒன்றாக இலங்கையில் கவர்ச்சிகரமான இடங்களை மேம்படுத்துவத்றகு சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசமாக வெளியிடப்பட்டுள்ள வலயங்கள் மற்றும் அதிகாரசபைக்குச் சொந்தமான காணிகளில் அமுல்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி செயற்திட்டங்களில் வழங்கப்படுகின்ற பங்களிப்பை மதிப்பிடுதல் அத்தியாவசியமாக இருந்தமை.

இ. சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசமாக வெளியிடப்பட்டிருந்த போதிலும் அந்தப் பிரதேசங்களில் சுற்றுலா பிரயாணிகளுக்காக தேவையான வசதிகள் ஏனும் காணப்படாதிருந்தமை கடந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டமை.

ஈ. 2010 ஆம் அண்டில் இருந்து அதிகார சபைக்குரிய காணப்படுகின்ற அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக ஈடுபடுத்தக்கூடிய 5404 ஏக்கர் காணியில் கணிசமான அளவு 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக வாடகைக்கு வழங்கப்படாமை மற்றும் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள அநேகமான காணிகளில் செயற்பாட்டு நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்படாமை.

மேற்கூறப்பட்ட பிரச்சினைகளின் காரணமாக இந்த கணக்காய்வு பிரச்சினைகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 2.5 கணக்காய்வு முறைமை

இந்த அறிக்கையை தயாரிக்கும் போது கீழே காண்பிக்கப்படுகின்ற முறைமை பின்பற்றப்பட்டிருந்தது.

### 2.5.1 ஆவணங்களைப் பரிட்சித்தல்

மேலே 2.3 பந்தியில் காண்பிக்கப்படுகின்ற விடயங்களின் கீழ் காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகளை பரிட்சித்தல்.

அ) அமைச்சரவைக் குறிப்பு மற்றும் அமைச்சரவை தீர்மானம்

ஆ) பணிப்பாளர் சபை குறிப்புக்கள் மற்றும் பணிப்பாளர் சபை தீர்மானம்

இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விஷேட வர்த்தமானி

ஈ) நிலையான சொத்துப் பதிவேடு

உ) நிர்மாண ஒப்பந்த உடன்படிக்கை

ஊ) மதிப்பீட்டு அறிக்கை

எ) பெறுகைகள் கோவை

ஏ) செயலாற்றல் அறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்கள்

ஐ) பிரதான திட்டம் (Master Plan)

ஒ) கூட்டிணைந்த திட்டம்

ஓ) சந்தைப்படுத்தல் திட்டம்

ஔ) வாடகை உடன்படிக்கை / சேவை உடன்படிக்கை

க) இலத்திரனியல் தபால் மூலம் பரிமாற்றப்பட்ட ஆவணங்கள்

கா) கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் மற்றும் பற்றுச்சீட்டுக்கள் போன்றவை.

### 2.5.2 ஏனைய பரிசோதனைகள்

அ) மேற்கூறப்பட்ட செயற்பாடுகளுக்குரிய எழுத்து மூல மற்றும் இலத்திரனியல் தபால் மூலம் கிடைத்த தகவல்களை பகுப்பாய்வு ரீதியில் உட்படுத்துதல்.

ஆ) உரிய தரப்பினருடன் கலந்துரையாடுதல்.

இ) பௌதீக பரிசோதனைகளை மேற்கொள்ளல்.

## 2.6 கணக்காய்விற்கான அதிகாரபலம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகள் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது.

## 3. விரிவான கணக்காய்வு அவதானிப்புக்கள்.

### 3.1 சுற்றுலா அபிவிருத்தி பிரதேசங்களை இனங்காணல் மற்றும் அபிவிருத்தி செய்தல்.

#### 3.1.1 சுற்றுலா பிரதேசங்களை இனங்காணல் மற்றும் வர்த்தமானி மூலம் பகிரங்கப்படுத்துதல்.

ஏதாவது பிரதேசமொன்றில் வெளிநாட்டு சுற்றுலா பிரயாணிகளுக்கு தமது பிரயாண இடங்களில் சென்று பார்வையிடுவதற்காக பொருத்தமான சுற்றுலா கவர்ச்சிகரமான இடங்களை உள்ளடக்கியிருக்குமாயின் அந்த சுற்றுலா பிரயாணிகளுக்கான வசதிகள், சேவைகளை வழங்குதல் மற்றும் ஒழுங்குபடுத்துவதை நோக்காகக் கொண்டு இப் பிரதேச ‘‘சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசம்’’ ஆக அமைச்சரினால் பெயரிடப்பட்டு வர்த்தமாணியில் பிரசுரிக்கப்படுகிறது. அதன்பிரகாரம் 1987 ஆம் ஆண்டு முதல் 2005 வரை 11 பிரதேசங்கள் 1987 இன் 2 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1968 இன் 14 ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்தி சட்டத்தின் 73(அ) பிரிவின் பிரகாரமும், 2005 ஆம் ஆண்டின் பின்னர் 03 பிரதேசங்கள் 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் தொடர்பான அலுவல்கள் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் பிரகாரமும் வெளியிடப்பட்டிருந்தது. விபரம் இணைப்பு இலக்கம் 01 இல் காண்பிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் பிரகாரம் சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசமாக வெளியிடுதல் அதிகார சபையின் பரிந்துரையின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அதிகார சபையால் 2005 ஆம் ஆண்டின் பின்னர் பேரிடப்பட்ட 03 பிரதேசங்களுக்கு உரிய அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்ட போதும் எந்தவொரு பரிந்துரையும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை.

(ஆ) 1987 ஆம் அண்டு முதல் 2019 ஆம் ஆண்டுவரை சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசங்கள் 14 அமைச்சரால் வர்த்தமாணியில் பிரசுரிக்கப்படுகின்ற நியதிகளின் மூலம் வெளியிடப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வு திகதியான 2023 செப்டம்பர் 30 ஆம் திகதி வரை 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அதிகார சபையால் புதிய சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசம் இணங்காணப்பட்டு வெளியிடப்பட்டிருக்கவில்லை.

#### 3.1.2 சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசங்களுக்குரிய ஒழுங்கு விதிகளைத் தயாரித்தல்

2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் சட்டத்தின் 26 (03) பிரகாரம் சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசமொன்றில் உள்ளடக்கிச் செல்லப்படவேண்டிய சுற்றுலா நடவடிக்கைகள், வணிக மற்றும் ஏனைய செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தி கட்டளை தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் மேற்கூறப்பட்ட சுற்றுலா அபிவிருத்தி வலயங்கள் 14 இற்காகவும் கணக்காய்வு திகதியான 2023 செப்டம்பர் 30 ஆம் திகதிவரை அவ்வாறு கட்டளைகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.1.3. சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசங்களில் சுற்றுலா கவர்ச்சிகரமான இடங்களை இனங்காணல்

2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் சட்டத்தின் 26 (3) ஆம் பிரகாரம் பிதேசமொன்றில் உள்ளடக்கி செல்ல வேண்டிய பேணிச்செல்லப்பட வேண்டிய சுற்றுலா நடவடிக்கைகள், வணிக மற்றும் ஏனைய நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தும் கட்டளை தயாரிக்க வேண்டியிருந்ததுடன் அந்தப் பிரதேசங்களில் வசதிகள் தொடர்பான பட்டியல் மற்றும் சுற்றுலாதாரிகளை கவருகின்ற இடங்களாக இனங்காணக்கூடிய வரலாற்று சிறப்புமிக்க மற்றும் சுற்றாடல் பிரதேசங்களை அந்தக் கட்டளைகளில் உள்ளடக்குதல் வேண்டும் எனினும் சட்டம் அமுல்படுத்தப்பட்டதன் பின்னர் வெளியிடப்பட்ட கற்பிட்டி, குச்சவெளி மற்றும் இரணவில என்ற சுற்றுலா பிரதேசங்களுக்குரிய மேற்கூறப்பட்ட பிரிவின் பிரகாரம் அவ்வாறான கவர்ச்சிகரமான இடங்களை உள்ளடக்காமல் எல்லை மாத்திரம் உள்ளடக்கப்பட்டு பிரதேசம் பெயரிடப்பட்டு

இருந்தது. புதிய சட்டம் அமுல்படுத்தப்படுவதற்கு முன்னர் வெளியிடப்பட்ட சுற்றுலா பிரதேசங்கள் 11 இலும் அவ்வாறு கவர்ச்சிகரமான இடங்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### 3.1.4 சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசத்தில் சுற்றுலா பிரயாணிகளுக்காக ஏற்படுத்தவேண்டிய வசதிகள்

1987 இள் 02 ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்தி (திருத்தப்பட்ட) சட்டத்தின் இரண்டு ஆம் பிரிவின் பிரகாரம் சுற்றுலா அபிவிருத்தி பிரதேந்களுக்குரிய பணிப்பாளர் சபை பணிகள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

i) சுற்றுலா பிரதேசத்தில் உள்ளடக்கப்பட்ட சுற்றுலா வசதிகள் மற்றும் சேவை மேம்படுத்தல், திட்டமிடல் மற்றும் ஊக்குவித்தல்

ii) சுற்றுலா பிரதேசத்தில் உள்ளடங்கியுள்ள சுற்றுலா வசதிகள் மற்றும் சேவைகளை ஒழுங்குபடுத்துதல் நிருவகித்தல் பராமரித்தல் மற்றும் அமுல்படுத்துதல்

உதாரணம்:- ** உட்கட்டமைப்பு வசதிகளை உள்ளடக்கிய ஏனைய பௌதீக வசதிகள்

- சுற்றுலா தகவல் நிலையத்தை நிர்மானித்தல், நுழைவு வீதிகள் ,வீதி இருபக்கமும் மின் விளக்குகள் முறைமை, பார்வையிடல் மேடை, நீர் வசதிகள், சிற்றுண்டிச் சாலை, வாகனத்தரிப்பிடம், மலசலகூடம், கரையோரத்தை அண்மித்த பிரதேசங்களில் ஆடைகள் மாற்றுமிடம் மற்றும் குளியலறை, கழிவுகள் அகற்றும் வசதிகள்

** சுற்றுலா பாதுகாப்பு

- சுற்றுலா பொலிஸ் பிரிவு மற்றும் அதற்கான தேவையான வசதிகள் கரையோரம் சார்ந்த உயிர்காப்பு அலகுகள் என்பவற்றை இஸ்தாபித்தல்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) வசதிகளை ஏற்படுத்துவதற்காக கவனம் குறைவடைந்தமை**

2019 ஆம் ஆண்டுமுதல் 2023 ஆம் ஆண்டுவரை இணங்காணப்பட்ட சுற்றுலா அபிவிருந்தி வலயங்களுக்குரிய புதிய வசதிகளை இஸ்தாபித்தல் அல்லது காணப்படுகின்ற வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக போதியளவாக கவனம் செலுத்தப்பட்டமைக்கும் அக்கால பணிப்பாளர் சபை அறிக்கை பரிசீலனையின் போது உறுதிப்படுத்தப்படவில்லை.

**(ஆ) பாசிக்குடா சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசம்.**

பாசிக்குடா சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசமாக 2013 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட பிரதான திட்டத்தில் இஸ்தாபிக்கப்பட வேண்டிய 39 வசதிகள் இணங்காணப்பட்டதுடன் அதில் மலமகற்றும் சுத்திகரிப்பு முறைமை, நீர்த் தாங்கி, ஓய்வுஅலுவலகம், கழிவகற்றும் வசதிகளுடனான கட்டிடம் மாத்திரமே ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. 2023 செப்டம்பர் மாதம் வரையில் ஏனைய வசதிகள் இஸ்தாபிக்கப்படாதிருந்ததுடன் ஸ்தாபிக்கப்பட்ட வசதிகளுக்கிடையே சுகாதார வசதிகளுடன் உள்ள கட்டிடமும் பயன்படுத்தப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. மேலும் அந்தப் பிரதேசத்திற்கு வருகை தருகின்ற சுற்றுலா பயணிகளுக்கு முறையான நுழைவு வீதி மற்றும் பொது வாகனத் தரிப்பிடம், வீதி விளக்குகள், குடிநீர் வசதிகள் போன்ற அத்தியவசிய வசதிகளை வழங்குதல் கட்டாயமாகக் காணப்பட்டதுடன் பிரதேசத்தில் நிரந்தரமாக தொடர்ச்சியாக நடமாடுகின்ற உயிரினங்கள் சுத்தத்திற்கும், சுற்றுலா பயணிகளின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்த வசதிகள் ஸ்தாபிக்கப்படாமையின் அடிப்படையில் அந்தப் பிரதேசங்களில் சுற்றுலா

கைத்தொழிலில் ஈடுபடுகின்ற தொழில் முயற்சியாளர்ளுக்கு கைத்தொழிலில் தொடர்ச்சியாக ஈடுபடுவதிலும் இடையூறுகள் தோன்றியிருந்தது.

**(இ) குச்சவெளி சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசம்**

குச்சவெளி சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசம் மற்றும் செயற்திட்டத்திற்காக 2019 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்பட்ட பிரதான திட்டத்தில் பிரசேத்திற்குரியதாக ஏற்படுத்தப்பட வேண்டிய அத்தியவசிய வசதிகளுக்கு இடையே பிரதானமாக வீதி முறைமையை அபிவிருத்தி செய்தல் மற்றும் நீர் வசதிகளை விருத்தி செய்ய வேண்டியவை இனங்காணப்பட்டிருந்தது. எனினும் முறையான வீதி முறைமை மற்றும் நீர் வழங்கல் திட்டம் பிரதேசம் சார்ந்த ரீதியில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக பிரதேசத்தில் சுற்றுலா செயற்திட்டத்திற்காக போதியளவான மின்சார வழங்கல் இந்த சுற்றுலா பிரயாணிகளுக்காக தேவையான ஏனைய வசதிகளும் பிரதேசத்தில் போதியளவான பிரகாரம் காணப்படாதிருந்தமையும் பௌதீக பரிசோதனையின் போது பௌதீக ரீதியில் அவதானிக்கும் போது தெளிவாகின்றது. இந்த வசதிகளை ஏற்படுத்துதல் தொடர்பாக அதிகார சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. இதன் காரணமாக சுற்றுலா கவர்ச்சி கரமான இடங்கள் அந்தப் பிரதேசத்தில் காணப்பட்ட போதும் சுற்றுலாதாரிகளின் பிரயாணி களின் வருகை குறைந்த மட்டத்தில் காணப்பட்டது மேலும் சுற்றுலா செயற்திட்டத்திற்காக அந்தப் பிரதேசங்களுக்கு முதலீட்டாளர்களை கவருவதற்கு இடையூறாக இருந்தமையும் ஏற்பட்டிருந்தது.

**(இ) தெஹிவளை கல்கிஸ்ஸ சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசம்**

தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபையின் நகர பிரிவு இலக்கம் 18 எல்லையுடன் பிரதேச சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசமாக 1992 மார்ச் மாதம் 12 ஆம் திகதி முன்னாள் சுற்றுலா மற்றும் கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரால் வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்டிருந்தது. அந்த வலயத்தில் பிரதானமாக சுற்றுலா பிரயாணிகளுக்கு கவரக்கூடிய கவர்ச்சிகரமான இடமாக தெஹிவளயில் இருந்து கல்கிஸ்ஸ வரையான அழகிய கரையோர பகுதி இனங்காணப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) அந்தப் பிரதேசத்தில் கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது வலயத்தில் சுற்றுலா மேம்பாட்டிற்கான வசதிகளை வழங்குவதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாதிருந்தமை காணப்பட்டதுடன் அதன் பிரகாரம் பின்வரும் பிரச்சினைகளை இனங்காணக்கூடியதாக இருந்தது.

- கரையோரப் பகுதியில் பார்வையிடுவதற்கு வருகை தருகின்ற உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு சுற்றுலா பயணிகளுக்கு குடிநீர், மலசல கூட வசதிகள், குளியல் அறை வசதிகள், ஆடைமாற்றுவதற்கான வசதிகள் பிரதேசத்தில் காணப்படாமை.
- சுற்றுலா பயணிகளுக்கு புகையிரதம் ஊடாக கரையோரத்தின் இரு பக்கங்களுக்கும் பாதுகாப்பாக மாறக்கூடிய திட்டமுறைமை ஒன்று காணப்படாமை.
- கரையோரத்தை அண்மித்த பிரதேசத்தில் எந்தவொரு மின் விளக்குகளும் காணப்படாமையால் இரவு வேளைகளில் சுற்றுலா பயணிகள் பிரதேசத்தில் உயிர்காப்பு நடவடிக்கைகள் மேற்கொள்கின்ற உத்தியோகத்தர்களும் கஷ்டத்திற்கு உட்பட்டமை.

- சுற்றுலாதாரிகளுக்கு அவர்களுக்கு எடுத்துச் செல்லுகின்ற உணவு குடிபானங்களைப் பெற்றுக்கொள்ளும் வசதிகள் பிரதேசத்தில் காணப்படாமை. (Sunbed /Bench)
- தனியார் வாகனங்கள் வருகை தருகின்ற சுற்றுலா பயணிகளுக்கு தமது வாகனங்களை நிறுத்திவைப்பதற்காக பொது வாகனத்தரிப்பிடம் பிரதேசத்தில் காணப்படாமை.
- கரையோரப் பிரதேசத்தில் முறையற்ற வகையில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன். அவர்களுக்காக பொருத்தமான இடங்களை வரையறுத்து தேவையான வசதிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமை.

(ii) இந்த வலயம் சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசமாக பெயரிடப்பட்டு 30 வருடங்கள் கடந்திருந்த போதும் இதற்காக தேவையான அடிப்படை வசதிகள் ஏனும் ஸ்தாபிக்கப்படா திருந்தமையின் பின்புலமாக சுற்றுலாத் துறையில் பின்னடைவு தொடர்பாக நேரடியாக பொறுப்புக் கூறுகின்ற சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை அது தொடர்பாக கண்டறிந்து அந்த வசதிகளை ஸ்தாபிப்பதற்கு நேரடியாகவும் அல்லது தனியார் துறையினைத் தொடர்பு படுத்துவதற்கோ அல்லது வசதிகளை வழங்குதல் தொடர்பாக அவ்வாறான திட்ட முறைமையொன்றைத் தயாரிக்கும் தேவை தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(iii)கரையோரப் பகுதியில் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் தனியார் அமைப்பு ஒன்றின் செயற்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படுவதுடன் அதற்கான வசதிகளை வழங்குவதற்கு தேவையாக பங்களிப்பை மேற்கொள்வதற்காக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iv) மேலும் பிரதேசத்தில் சுற்றுலா ரீதியில் முக்கியத்துவத்தைக் கவனத்திற் கொண்டு பிரதேசத்தில் மேற்கொள்ளக்கூடிய சுற்றுலா செயற்பாடுகள் மற்றும் வியாபார நிலையங்கள் தொடர்பாக மதிப்பீடு செய்து அதற்காக தனியார் துறையினையும் தொடர்புபடுத்தியே வேலைத் திட்டமொன்றைத் தயாரித்து அமுல்படுத்துவதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(v) வலயத்தில் அமுல்படுத்தப்படுகின்ற கரையோரப் பாதுகாப்பு திணைக்களத்தின் உயிர்காப்பு பிரிவு மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் உயிர்காப்பு பிரிவிற்காக தேவையான வசதிகளை வழங்குவதற்கான பங்குபற்றுதல் அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.1.5 சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசத்தில் வசதிகளை ஏற்படுத்துதல் தொடர்பாக அதிகார சபையின் நேரடி நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் மற்றும் உரிய நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி செலவினம்.**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அதிகாரசபை மற்றும் வடமேல் மாகாண சபை ஒன்றிணைந்து கற்பிட்டி சுற்றுலாப் பிரதேசத்தில், மதுரங்குழியில் சுற்றுலாத் தகவல் மற்றும் வசதிகள் நிலையமொன்றை நிர்மாணித்தல் (ஓய்வு தலம்) இற்காக ஒன்றிணைந்த செயற்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக அதிகார சபையினால் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 6,771,807 தொகை செலவிடப்பட்டிருந்தது. 2023 செப்டெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் வெளிநாட்டு பயணிகளுக்கு தகவல் மற்றும் வசதிகளை வழங்காமல் செயலிழந்த நிலையில் காணப்பட்டது. சுற்றுலாப் பயணிகளுக்கு தகவல்களை வழங்கும் முறைமை மற்றும் கட்டிடத்திற்குத் தேவையான உபகரணங்களை வழங்கி நிலையத்தை

செயற்படுத்துவதற்கு கணக்காய்வுத் திகதி வரையிலும் மாகாண சபை மற்றும் அதிகார சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதன் மூலம் அந்தப் பிரதேசத்திற்கு வருகை தருகின்ற சுற்றுலா பிரயாணிகளுக்கு தேவையான தகவல்கள் மற்றும் வசதிகளை வழங்குவதற்கு முடியாமையினால் அதிகாரசபையினால் செலவிடப்பட்ட பணத்தின் மூலம் சுற்றுலாத் துறைக்கு பிரதிபலனொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

(ஆ) அதிகாரசபை மற்றும் சொரனாத்தொட்ட பிரதேச சபை ஒன்றிணைந்து எல்ல சுற்றுலா பிரதேசத்தில் துன்ஹிந்த எல்லைக்கு அண்மித்த பார்வையிடல் வசதிகள் மற்றும் சுற்றாடலுக்கு இசைவான 20 கடைகள், நிர்மாணிக்கும் நோக்கத்துடன் துன்ஹிந்த எல்ல பொது வசதிகள் அபிவிருத்தித் திட்டம் 2017 பெப்ரவரியில் ஆரம்பிக்கப்பட்டு 2018 சனவரி மாதம் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இதற்காக ரூபா 7,488,133 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட திகதி வரையிலும் 10 கடைகள் ரூபா 2,864,289 செலவில் நிர்மாணிக்கப்பட்டு செயற்திட்டம் நிறுத்தப்பட்டிருந்தது. கடைகளை நிர்மாணித்தல் நியமம் இன்றி இருந்தமையால் மிகுதிக் கடைகளை நிர்மாணிக்காமல் மீண்டும் 2021 ஆம் ஆண்டின் போது துன்ஹிந்த செயற்திட்டம் - கட்டம் II இன் கீழ் 05 கடைகள் ரூபா 2,350,000 செலவினத்தில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதும் அதுவும் கணக்காய்வுத் திகதியான 2023 செப்டெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. நிர்மாணங்கள் நியமங்கள் இன்றி இருந்தமை மற்றும் அதிகாரசபை அதனுடன் தொடர்புடைய மேற்பார்வைகள் மேற்கொள்ளாமை இதற்கு காரணமாக இருந்தது. இதன் மூலம் எல்ல பிரதேசத்தை மேவுகை செய்யும் வகையில் சுற்றுலா பயணிகளுக்கான வசதிகளை வழங்குவதற்கு முடியாதிருந்தது.

(இ) அதிகாரசபையின் 2021 ஒக்டோபர் 28 ஆம் திகதி இலக்கம் 2021/10/08 என்ற பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் மூலம் சுற்றுலா பயணிகளுக்கு பாதுகாப்பான சூழலொன்றை ஏற்படுத்துவதற்காக 04 பிரதேசங்களில் 04 சுற்றுலா பொலிஸ் அலகுகளை நிர்மாணிப்பதற்காக ஒரு அலகுக்கு ரூபா 5.61 மில்லியன் வீதம் ரூபா 22.44 மில்லியன் ஒதுக்குவதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதன் கீழ் கல்கிஸ்ஸ சுற்றுலா வலயத்தில் நிர்மானிக்கப்படுகின்ற சுற்றுலா பொலிஸ் அலகு கட்டடத்திற்காக ரூபா 1,120,000 முற்பணத் தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் முதலாவது கட்டத்தின் கொடுப்பனவாக சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலான ரூபா 2,766,233 தொகை செலுத்துவதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. கட்டடத்தின் நிர்மானம் 2023 செப்டம்பர் 30 ஆம் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் ஏனைய பொலிஸ் அலகுகளும் நிர்மாணித்தல் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் மூலம் பிரதேச மட்டத்தில் பொலிஸ் அலகுகளை இஸ்தாபித்து சுற்றுலா பயணிகளுக்குத் தேவையான பாதுகாப்பினை வழங்குதல் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் திட்டமிடப்பட்ட பிரகாரம் நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

### 3.2 சுற்றுலா அபிவிருத்தி திட்டங்களின் செயலாற்றல்.

#### 3.2.1 கற்பிட்டடி சுற்றுலா அபிவிருத்தி செயற்திட்டம்

1947 இன் 08 ஆம் இலக்க காணி கட்டளைச் சட்டத்தின் 02 ஆம் பிரிவின் கீழ் குடியரசின் சனாதிபதியால் விடுவிப்புப் படியாக 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் போது கற்பிட்டியின் 12 தீவுகளுக்குரிய 2,056.73 ஏக்கர் காணி அளவு அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. விபரம் இணைப்பு 02 இல் காண்பிக்கப்படுகின்றது.

அதிகாரசபையால் கைப்பற்றப்படாமல் இருந்த மற்றும் ஏனைய முறையில் அதிகாரசபைக்கு கையளிக்கப்படாத 1,915.96 ஏக்கரையுடைய (பள்ளியவத்த மற்றும் முத்துவல்) இரண்டு தீவுகளும் அதிகாரசபைக்கு இலவச கையளித்தலாக கையளிக்கப்பட்ட 1,845.48 ஏக்கரை உள்ளடக்கிய கற்பிட்டியில் 08 தீவுகளுக்கு உரிய செயற்றிட்டம் மற்றும் கற்பிட்டி நகர

அபிவிருத்திக்கான காலம் குறித்துரைத்த ரீதியல் குறிப்பிடப்படாதிருந்த பிரதான திட்டம் 58.74 ஏக்கரையுடைய வெல்லையில் 03 தீவுகளுக்கும் உரிய செயற்றிட்டத்திற்காக 2012 மார்ச் 20 ஆம் திகதி பிரதான திட்டமும் தயாரிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) முதலீட்டாளர்களை கவர்ந்து கொள்ளல் மற்றும் தெரிவு செய்தல்.**

2010 ஆம் ஆண்டின் டீபாது கற்பிட்டியில் ஒரு தீவுக்குரிய ஒரு கம்பனியும், 2011 ஆம் ஆண்டின் போது கற்பிட்டியில் 03 தீவுகளுக்குரிய இன்னுமொரு கம்பனியும், 2020 ஆம் ஆண்டில் ஒருதீவுக்குரிய ஒரு கம்பனியும் 2022 ஆம் ஆண்டின் போது ஐந்து தீவுகளுக்குரிய ஐந்து கம்பனிகளும் (முன்னர் குறிப்பிடப்பட்ட கம்பனியையும் உள்ளடக்கி) இற்காக காணி அதிகாரசபையினால் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதும் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது வாடகைக்கு வழங்கிய கம்பனிகள் இரண்டும் அதிகாரசபைக்கு தெரிவு செய்தல் தொடர்பான முறைமை கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்க வில்லை.

**(ஆ) செயற்திட்டத்தில் அபவிருத்தி செய்யப்படவேண்டிய உட்கட்டமைப்பு வசதிகளை உள்ளடக்கிய ஏனைய வசதிகளை அமுல்படுத்துதல்.**

குடியரசின் சனாதிபதியால் இலவச கையளித்தலாக 2010 ஆம் ஆண்டின் போது கற்பிட்டியில் 11 தீவுகளின் காணிகளும், 2012 ஆம் ஆண்டின் போது ஒரு தீவுக்குரிய காணியும் அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டு கணக்காய்வுத் திகதியான 2022 நவம்பர் 30 ஆம் திகதி வரையிலும் 10-12 வருட காலம் கடந்திருந்த போதிலும் கற்பிட்டியில் பிரதான திட்டத்தில் உள்ளடங்கியுள்ள சுற்றுலா பயணிகளுக்கான இறங்குதுறை மற்றும் மேடை, நீர் வழங்கல் உத்தேசத் திட்டம், நீர்க் களஞ்சியம், மத்திய மயப்படுத்தப்பட்ட மின்சார வலுக்கூடம், நீர் சுத்திகரிப்பு, கழிவுகள் மற்றும் கழிவுப் பொருட்களை சுத்தப்படுத்தும் இயந்திரம், மின் பிறப்பாக்கி, வலுக்கூடம் (சூரியவலு மற்றும் காற்று வலுக்கூடம்), கரையோரத்தின் முன்பக்க அபிவிருத்தி, பொது நுழைவு அலங்காரப்படுத்துதல், கழிவுகளை அகற்றறுதல், மின்தொலைத் தொடர்பு நிலையம், தகவல் நிலையம், நடமாடும் வீதிகள் போன்ற உற்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு அதிகார சபை தவறியிருந்தது.

**(இ) செயல்நடவடிக்கைத் திட்டம்.**

2020, 2021, 2022 ஆம் ஆண்டுகளுக்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திடடம் உரிய செயல் முன்னேற்ற அறிக்கையில் கற்பிட்டி தீவு செயற்திட்டத்தில் விஷேட அடையாளத்துடன் தீவுகள் விடுமுறை விடுதி அபிவிருத்தி செய்தல் மற்றும் ஹோட்டல் அறைகள் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்காகக் கொண்டு முறையே ரூபா 03 மில்லியன், ரூபா 9.6 மில்லியன், ரூபா 5 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2022 நவம்பர் 30 வரையிலும் அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நிதி பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **விபரம்** | **நிதிஏற்பாடு (ரூபா மில்லியன்)** |
|---|---|
| **2020** | |
| நிர்மாணத் திட்டம் பூர்த்தி செய்தல் மட்டும் நிர்மாணங்கள் மேற்பார்வை | 0.2 |
| நிர்மாண வேலைகள் | 2.8 |
| | 3.0 |
| 2021 | |
| வன அலுவலக கட்டிட நிர்மாணம் | 9.0 |
| தொலைத்தொடர்பு அபிவிருத்தி செய்தல் தொலைத்தொடர்பு மேற்பார்வை இயந்திரம் | 0.5 |
| முதலீட்டை மேம்படுத்துவதற்கான செயல்நடவடிக்கை திட்டம் | 0.1 |
| | 9.6 |
| 2022 | |
| வன அலுவலக கட்டிட மறுசீரமைப்பு | 4.0 |
| பொது இறங்குதுறைக்காக திட்டமிடலை ஆய்வு செய்தல் மற்றும் வழங்குவதற்காக ஆலோசனையாளர்களை சேர்த்தல். | 1.0 |
| | 5.0 |

**(ஈ) முதலீட்டாளர்களுக்கு காணியினை வாடகைக்கு வழங்கல், முதலீட்டாளர்களால் செயற்றிட்டத்தை அமுல்படுத்துதல் மற்றும் அதிகார சபையின் மேற்பார்வை.**

பின்வரும் அவதாணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது கற்பிட்டியில் நான்கு தீவுகளுக்குரிய கம்பனிகளில் இரண்டும், 2020 ஆம் ஆண்டில் ஒரு தீவுக்குரிய கம்பனியும, 2022 ஆம் ஆண்டின் போது ஐந்து தீவுகளுக்குரிய ஐந்து கம்பனிகளுமாக 10 தீவுகளில் 07 முதலீட்டாளர்களுக்காக வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் வாடகைக் காணியில் குடியிருப்பவர்கள் தொடர்பான பிரச்சினை, அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளல் தொடர்பான பிரச்சினை, முதலீட்டாளர்களினால் தேவையான ஆவணங்களுடன் விண்ணப்பங்கள் முதலீட்டு இணைப்பு அலுவலக பிரிவிற்கு சமர்ப்பிக்கப்படாமைமற்றும் போதியளவான பங்களிப்பு அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படாமையினால் 2023 செப்படம்பர் 30 கணக்காய்வுத் திகதி வரையிலும் அந்த ஆதனங்களில் எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கைகளும் அரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. விபரம் இணைப்பு இலக்கம் 03 இல் காண்பிக்கப்படுகின்றது.

(ii) அதிகாரசபையினால் 2010 ஆம் ஆண்டின் போது அதிகார சபையினால் கையளிக்கப்பட்ட மற்றும் அந்த ஆண்டின் போது வாடகைக்கு வழங்கப்பட்ட இப்பந்தீவு தீவுக்காக பிரதான திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் வெல்லை – 1, வெல்லை -11, வெல்லை 111 என்ற மூன்று தீவுகளும் 2011 யூலை 13 இல் கம்பனியொன்றுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அதன் பிரதான திட்டம் 2012 மார்ச் 20 ஆம் திகதி தயாரிக்கப்பட்டமையால் திட்டம் தயாரிக்கப்படாமல் அந்த மூன்று தீவுகளும் வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(iii) வகுப்புவாத மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்காகக் கொண்டு பிரதேச மக்களை வலுப்படுத்துதல் உபாயவழி முகாமைத்துவத்திட்டம் , கழிவுப் பொருள் முகாமைத்துவம் கழிவுகளை சுத்திகரித்தல், நீர்ப் போக்குவரத்து மற்றும்

உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் வீட்டுக் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல், கடற்றொழில் கைத்தொழில் அபிவிருத்தி, உப்பு உற்பத்தி கைத்தொழில் அபிவிருத்தி, அபிவிருத்தி சுகாதார சேவை வசதிகளை அபிவிருத்தி செய்யும் நோக்காகக் கொண்டு நகர அபிவிருத்தி அதிகார சபை, கடற்றொழில் அமைச்சு, கரையோர பாதுகாப்பு அலுவலகம் போன்ற அரசாங்க பாதுகாப்பு நிறுவனங்களை தொடர்புபடுத்தி கற்பிட்டி நகர அபிவிருத்தி செயற்பாடுகள் அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படுவதற்கு பிரதான திட்டம் தயாரிக்கப்படடிருந்த போதிலும் அதற்கு இணங்க நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(உ) வாடகைப்பணம் அறவிடுவதற்கு தவறியிருந்தமை.**

2022 நவம்பர் 30 ஆம் திகதி வரையில் வாடகைக்கு வழங்கப்பட்ட ஐந்து தீவுகளுக்குரிய ரூபா 59,025,931.60 தொகை ஐந்து வாடகையாளரிடமிருந்து அறவிடுவதற்கு அதிகாரசபை தவறியிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகிறது.

| வாடகைக்கு வழங்கப்பட்ட தீவு | வாடகைக்கு வழங்கப்பட்ட திகதி | வாடகைக்கு பெற்றவர் | நிலுவை வாடகைத் தொகை (ரூபா) |
|---|---|---|---|
| இப்பந்தீவு | 2010.09.02 | கியூப் லங்கா லெஸர் புரொப்பர்ட்டீஸ் தனியார் கம்பனி | 50,796,768.61 |
| வெல்லை – 1 , வெல்லை – 11, வெல்லை – 111 தீவுகள் | 2011.07.13 | சன் றிசோட் இன்வெஸ்ட்மென்ற் லங்கா தனியார் கம்பனி | 1,728,166.92 |
| சின்ன இரமதீவு | 202012.14. | சமகீ ஹொட்டல் அன்ட் ட்ரவல்ஸ் தனியார் கம்பனி | 1,556,402.93 |
| இரமதீவு மேற்கு | 2022.03.07 | சமகீ ஹொட்டல் அன்ட் ட்ரவல்ஸ் தனியார் கம்பனி | 93,448.72 |
| சின்ன ஆரச்சல் | 2022.04.20 | நியூகியர்ஸ் இன்டநெஷனல் தனியார் கம்பனி | 4,327,935.88 |
| இரமதீவு | 2021.06.30 | கன்சல்ட்டன் இன்ஜினியர்ஸ் மற்றும் ஆக்கிடெக் தனியார் கம்பனி | 523,208.54 |
| | | | 59,025,931.60 |

**(ஊ) காணிகளை முதலீட்டு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு நீண்ட காலம் எடுத்தமை.**

2010 ஆம் ஆண்டின் போது கற்பிட்டியில் 06 தீவுகளுக்குரிய காணி 457.44 ஏக்கர் அளவு சனாதிபதியினால் இலவச கையளித்தலாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்ட போதிலும் அந்தக் காணியில் முதலீட்டு நடவடிக்கைக்காக நீண்ட காலம் (09-11) வருடங்கள் எடுத்திருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| தொடர் இலக்கம் | தீவுகள் | காணியின் அளவு (ஏக்கர்) | இலவச கையளித்தல் மூலம் வழங்கப்பட்ட காணி வழங்கப்பட்ட திகதி | உடன்படிக்கை செய்யப்பட்ட திகதி | தாமத காலம் (வருடம்) |
|---|---|---|---|---|---|
| 01 | பெரிய ஆரச்சல் | 109.75 | 2012.11.01 | 2022.10.18 | 09 |
| 02 | சின்ன இரமதீவு | 5.22 | 2010.11.01 | 2020.12.24 | 10 |
| 03 | இரமதீவு மேற்கு | 10.5 | 2010.11.01 | 2022.03.22 | 11 |
| 04 | சின்ன ஆரச்சல் | 41.1 | 2010.11.01 | 2022.04.20 | 11 |
| 05 | இரமதீவு | 223.79 | 2010.10.29<br>2010.11.01 | 2022.06.30 | 11 |
| 06 | காக்கா தீவு | 67.08 | 2010.11.01 | 2022.08.29 | 11 |

**(எ) கூட்டிணைந்த திட்டம்**

2020 சனவரி முதல் 2022 திசெம்பர் மாதம் வரை இரண்டு வருட காலத்திற்காக அதிகார சபை தயாரித்திருந்த கூட்டிணைந்த திட்டத்தின் 9 ஆவது பகுதியின் உபசெயற்பாடுகள் 9.4 இன் கீழ் உள்ளடங்கியுள்ள விரிவான நிறுவன செயல்நடவடிக்கை திட்டத்தின் கற்பிட்டி பிரதேசத்தில் சுற்றுலா அபிவிருத்தி செயற்றிட்டத்தை அறிமுகப்படுத்துதல், அபிவிருத்தி செய்தல், மேம்படுத்துதல், விருத்தி செய்யவேண்டியிருந்த போதிலும் 2022 நவம்பர் 30 ஆம் திகதி வரையிலும் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஏ) உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை.**

கியுப் லங்கா லேசர் புரப்பட்டீஸ் தனியார் கம்பனி

உடன்படிக்கையின் 5.2.7 இன் பிரகாரம் காலரீதியில் மீன்பிடி மக்களின் பயன்பட்டிற்காக உடன்படிக்கை ஆரம்பிக்கப்பட்ட திகதியான 2010 செப்டம்பர் 02 ஆம் திகதி முதல் 90 நாட்களுக்குள் தீவுகளில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் கட்டடங்களுக்காக அதிகாரசபையினால் பெயரிடப்பட்ட அபிவிருத்தி கணக்கிற்கு ரூபா 60 மில்லியன் வாடகையாளரினால் செலுத்தவேண்டியிருந்த போதும் அவ்வாறான தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தமைக்கான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் அதிகாரசபையால் மீன்பிடி மக்களினதும் சட்டரீதியாக மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற மீனவ சமூகத்தின் தனிப்பட்ட பயன்பாட்டிற்காகவும் இறங்குதுறையொன்றை அபிவிருத்தி செய்யவேண்டியிருந்த போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

உடன்படிக்கை 9.1 ஆம் பிரிவின் பிரகாரம் உடன்படிக்கையின் ஆரம்பத் திகதியிலிருந்து கம்பனியால் 36 மாதங்களுக்கு வணிக செயற்பாடுகள் ஆரம்பிக்க வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் உடன்படிக்கையின் 5.2 ஆம் பிரிவின் பிரகாரம் உவ்வொரு மாதமும் தவணையாக அதற்கு முன்னைய மாதத்தின் இறுதித் திகதியில் அல்லது அதற்கு முன்னர் செலுத்தவேண்டியிருந்த போதிலும் 2022 நவம்பர் 30 ஆம் திகதி வரையில் ரூபா 50,796,768.61 நிலுவை வாடகைப் பெறுமதியொன்று செலுத்தாதிருக்கும் போது முறையே உடன்படிக்கையின் 17.1.1 மற்றும் 17.1.2 பிரிவுகளின் பிரகாரம் உடன்படிக்கை இரத்து செய்ய முடியுமாக இருந்த போதும் அதிகாரசபையால் கணக்காய்வுத் திகதியான 2022 நவம்பர் 30 ஆம் திகதி வரையிலும் அதிகார சபை மற்றும் கைச்சாத்திட்ட உடன்படிக்கையை இரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கம்பனிக்கும் அதிகார சபைக்குமிடையே ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை கலைக்கப்படாமல் அந்தத் தீவுகளை உள்ளடக்கிய கற்பிட்டியில் 12 தீவுகளுக்காக புதிய முதலீட்டாளர்களை தெரிவு செய்வதற்காக

2019 யூலை 21 ஆம் திகதி மற்றும் 2019 ஒக்டோபர் 13 ஆம் திகதிகளில் சன்டே ஒப்சேவர் செய்திப்பத்திரிகை மூலம் முன்மொழிவுகள் கோரப்பட்டிருந்தது.

**நியூ கியர்ஸ் இன்டநெஷனல் தனியார் கம்பனி.**

உடன்படிக்கையின் 6.1.2 பிரிவின் பிரகாரம் உடன்டிக்கையின் ஆரம்பத் திகதியிலிருந்து கம்பனியால் 06 மாதங்களுக்குள் ஆரம்ப விடுவிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளாமை, உடன்படிக்கை செய்த திகதியான 2022 ஏப்ரல் 20 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த ஒரு வாடகைத் தவணைப்பணம் மாத்திரம் செலுத்தப்பட்டமையால் உடன்படிக்கையின் 5.1.1 மற்றும் 5.1.3 பிரிவுகளின் பிரகாரம் வாடகைப்பணம் செலுத்தாமை போன்ற விடயங்களின் அடிப்படையில் உடன்படிக்கையின் 15.1.2 பிரிவின் பிரகாரம் உடன்படிக்கை இரத்துச் செய்ய முடியுமாக இருந்த போதும் அதிகாரசபையால் கணக்காய்வுத் திகதியான 2022 நவம்பர் 30 ஆம் திகதி வரையில் அதிகார சபையின் கைச்சாத்திட்ட உடன்படிக்கையை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**சமகி ஹோட்டல் அன்ட் ட்ரவல்ஸ் தனியார் கம்பனி.**

அதிகாரசபைக்கும் கம்பனிக்குமிடையே 2020 திசெம்பர் 14 ஆம் திகதி சின்ன இமதிவ் தீவு தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் 6.1.2 பிரவின் பிரகாரம் உடன்படிக்கையின் ஆரம்பத் திகதியிலிருந்து கம்பனியால் 06 மாதங்களுக்குள் ஆரம்ப விடுவிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளாமை, 19 மாதத்திற்கு அதிக காலம் வாடகைத் தவணைப்பணம் செலுத்தாமையினால் உடன்படிக்கையின் 5.1.1 மற்றும் 5.1.3 பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் அடிப்படையில் உடன்படிக்கையின் 15.1.2 பிரிவின் பிரகாரம் உடன்படிக்கையை இரத்து செய்யவேண்டியிருந்த போதும் அதிகார சபையால் கணக்காய்வுதிகதியான 2022 நவம்பர் 30 ஆம் திகதி வரையிலும் அதிகார சபை மற்றும் கைச்சாத்திட்ட உடன்படிக்கையை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அந்தக் கம்பனியுடன் 2022 மார்ச் 07 ஆம் திகதி இரமதீவு மேற்கு தீவு தொடர்பாகவும் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது.

**(ஐ) செயலாற்றல் பிணைமுறி.**

அதிகாரசபைக்குச் சொந்தமான காணிகளில் சுற்றுலா செயற்றிட்டத்தை அபிவிருத்தி செய்வதற்காக தெரிவு செய்யப்பட்ட சகல முதலீட்டாளர்களினால் (உள்நாட்டு/வெளிநாட்டு) உடன் வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடுகின்ற சந்தர்பத்ததின் போது செயலாற்றல் பிணைமுறி ஒன்று பெறவேண்டியிருந்தமை 2022 சனவரி 18 ஆம் திகதிய இலக்கம் MTCA/PLD/03/01/92 என்ற கடிதத்தில் செயலாளர் சுற்றுலா அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அதிகார சபை மற்றும் நியு கியஸ் இன்டநேஷனல் தனியார் கம்பனிக்கிடையே 2022 ஏப்ரல் 20 ஆம் திகதி சின்ன ஆரச்சல் தீவு தொடர்பாக உடன்படிக்கை தயாரிக்கும் போது அது தொடர்பான பிரிவில் உடன்படிக்கையில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் சமகி ஹோட்டல் என்ட் ட்ரவல்ஸ் தனியார் கம்பனிக்கிடையே 2022 மார்ச் 07 திகதி மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 1,000,000 செயலாற்றல் பிணைமுறியும் பெறப்பட்டிருக்கவில்லை.

**(ஒ) முதலீட்டாளர்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதும் செயற்பாட்டு நடவடிக்கைகளை அமுல்படுத்தாத காணிகள் மற்றும் வாடகைக்கு வழங்கப்படாத காணிகள் தொடர்பாக அதிகார சபையினால் எடுத்த நடவடிக்கைகள்.**

2010 ஆம் ஆண்டின் போது கற்பிட்டியில் 02 தீவுகளுக்குரிய 1388.04 ஏக்கர் காணி அளவொன்று சனாதிபதியால் இலவச கொடுப்பனவாக அதிகார சபைக்கு கிடைக்கப்பெற்ற கணக்காய்வுத் திகதியான 2022 நவம்பர் 30 ஆம் திகதி வரையிலும் 12 வருட காலம் கடந்திருந்த போதும் அதிகார சபையால் அந்தக் காணிகளில் முதலீட்டாளர்களை இனங்கண்டு வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| தொடர் இலக்கம் | தீவுகள் | இலவச கையளித்தல் மூலம் காணி வழங்கப்பட்ட திகதி | காணியின் அளவு (ஏக்கர்) | தாமதமான காலம் (வருடம்) |
|---|---|---|---|---|
| 01 | உச்சமுனை | 2010.04.17 | 1096.19 | 12 |
| 02 | பத்தலன்குண்டு | 2010.11.01 | 291.85 | 12 |
| | | | 1388.04 | |

### 3.2.2 யால சுற்றுலா சுற்றுலா அபிவிருத்தி செயற்திட்டம்

யால பலட்டுப்பான பிரதேசத்தைச் சார்ந்த சுற்றுலா அபிவிருத்தி உத்தேச திட்டத்தின் செயல் நடவடிக்கைகளுக்காக 1136 ஏக்கர் காணி அறவொன்று 1971, 1973 மற்றும் 1975 ஆம் ஆண்டுகளின் போது அரசாங்கத்தால் வர்த்தமானி மூலம் கையேற்கப்பட்டிருந்தது. முதல் தடவையாக இந்தப் பிரதேசம் சார்ந்த சுற்றுலா முன்மொழிவு திட்டமொன்றை அமுல்படுத்துவதற்காக சுற்றுலா செயற்திட்டமாக **“வன சீவராசிகள் சுற்றுலா வலயம்”** ஏற்படுத்துவதற்காக 2012 செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதிய 019/519/1377/12 ஆம் இலக்க அமைச்சரவைக் குறிப்பின் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டதுடன் 2012 ஒக்டோபர் 04 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) எதிர்பார்க்கப்பட்ட பணிகள் நிறைவேற்றப்படாமை.**

மேற்கூறப்பட்ட பத்திரத்தின் 3.1 (இ) பந்தியின் பிரகாரம் ஒட்டுமொத்த செயற்திட்ட பிரதேசங்களும் பிரச்சினைக்குரியதாக பயன்படுத்தக்கூடிய வகையில் ஆறு வருட காலத்தில் மூன்று கட்டங்களுக்கு செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் 2012 ஆம் ஆண்டில் இருந்து இதுவரை 10 வருடங்கள் கடந்திருந்திருந்த போதும் முதலாவது கட்டம் மாத்திரம் அமுல்படுத்தும் நிலையில் காணப்பட்டது. அதன் பிரகாரம் இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்டத்தின் கீழ் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்ப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு முகாமைத்துவம் தவறியிருந்ததுடன் இதன் காரணமாக யால பலட்டுப்பான சுற்றுலா வலயத்தில் பல்வேறு வகையான சுற்றாடல் அனுபவம் உள்ள சுற்றுலா இடத்தைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அதன் பிரகாரம் பெற்றுக்கொள்வதற்கான இயலுமை காணப்படவில்லை.

**(ஆ) முதலீட்டாளர்களைத் தெரிவு செய்தலில் நலிவுகள் மற்றும் அதனால் காணிகள் குறைவாக பயன்படுத்தப்பட்டமை.**

இந்த பத்திரத்தின் 4.1 ஆம் பந்தியின் பிரகாரம் முதலாவது கட்டத்தின் போது விஷேடமாக சுற்றாடல் பாதுகாப்பு கொட்டகைக்காக மாத்திரம் கரையோரத்தை அண்மித்த நிலப் பகுதியில் 07 ஏக்கர் வீதம் 07 நிலக் கூறுகள் பெயரிடப்பட்டு நான்கு முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன் அந்த முதலீட்டாளர்கள் நான்கு பேர்களுக்கும் மேலதிகமாக அமைச்சரவைப் பத்திரத்தில் பெயர் குறிப்பிடப்படாத ஏனைய முதலீட்டாளர்கள் மூவருக்கும் 2013/03/14 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் பணிப்பாளர் சபை அங்கீகரித்த அந்த முதலீட்டாளர்கள் மூவரும் கணக்காய்வுத் திகதியான 2022 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிக்காதிருந்ததுடன் அமைச்சரவைப் பத்திரத்தில் பெயர் குறிப்பிடப்பட்ட முதலீட்டாளர்கள் இருவர் மாத்திரம் செயல் நடவடிக்கைகளை

ஆரம்பித்திருந்தனர். அதன் பிரகாரம் செயற்பாடுகளை ஆரம்பிக்காத முதலீட்டாளர்களின் நிதிக்கூற்றுக்களைப் பரீட்சித்த போது நட்டம் காணப்பட்டமை மற்றும் வாடகை பெற்ற ஆதனங்களை பிணையாக வைத்து கடன் பெற்றுக்கொள்வதற்கு கோரப் பட்டதன் பிரகாரம் அந்த முதலீட்டாளர்களுக்கு செயற்திட்டத்திற்காக நிதியீட்டம் செய்யும் இயலுமையும் கீழ் மட்டத்தில் காணப்படுகின்றமை வெளிப்படுத்தப்பட்டது. அந்த நிலைமையில் ‘‘முதலீட்டாளர்களைத் தெரிவு செய்யும் குழுவின்’’ கவனத்திற்கு உட்படுத்த வேண்டியிருந்ததா என கணக்காய்வின் போது பிரச்சினையாக இருந்தது. இதன் மூலம் முதலீட்டாளர்களுக்கு பொருத்தமான 35 ஏக்கர் நில அளவு 12 வருட காலத்திலிருந்து குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டது.

**(இ) முதலீட்டாளர்களினால் சுற்றாடல் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்படாமை.**

மேற்குறிப்பிடப்பட்ட பத்திரத்தின் 4.3 ஆம் பந்தியின் பிரகாரம் இலங்கை சுற்றுலா அதிகார சபையில் யால (பலட்டுப்பான) சுற்றுலா வலயத்தில் சுற்றாடலுக்கு இசைவான தங்குமிடங்களைப் பேணிச் செல்வதற்கான இயலுமையை உறுதிப்படுத்துவதற்காக சகல முதலீட்டாளர்களினாலும் ISO 14000 சுற்றாடல் சான்றிதழ் பெற்றுக்கொள்ளல் வேண்டும். எனினும் தெரிவு செய்யப்பட்ட முதலீட்டாளர்களினால் அந்த சுற்றாடல் சான்றிதழ் பெறப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக செயற்பாடுகள் இடையிடையே இயற்கை வளங்களைப் பயன்படுத்துதல் குறைவடைந்தமை மற்றும் நீர் மற்றும் சுற்றாடலுக்கு ஏற்படுகின்ற இழப்புக்களைக் குறைப்பதற்காக எடுக்க வேண்டிய செயற்பாடுகள் நியமமிடப்படாமையினால் சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படும் ஆபத்து காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

**(ஈ) நிர்மாண முறைமையில் பசுமை காணப்படாமை.**

பத்திரத்தின் 4.4 பந்தி செயற்திட்டங்களின் செயற்பாட்டு நடவடிக்கைகளை செய்தல். மற்றும் பின்பற்றப்பட வேண்டிய நிர்மாணத் திட்ட முறைமையின் ஒட்டுமொத்தமாக பசுமையானதாக இருக்க வேண்டி இருந்ததுடன் செயற்திட்ட காணி மற்றும் அண்மித்த பிரதேசங்களில் காடுகள் மற்றும் சுற்றாடல் தொடர்பில் எந்தவொரு தாக்கமும் ஏற்படாமல் இருப்பதற்கு கண்காணித்து கொள்வதற்காக உள்நாட்டு பொருட்களை ஆகக் கூடிய அளவில் பயன்படுத்த வேண்டி இருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் வலயத்திற்காக தயாரிக்கப்பட்ட அபிவிருத்தி வழிகாட்டியின் 6.5 வடிவமைப்பின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட உயரம் ஒரு மாடிக்கு வரையறுக்க வேண்டி இருந்தமையும் சுற்றாடல் மற்றும் மரங்களின் கட்டமைப்புக்கள் நிர்மாணித்தலை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். எனினும் செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிக்காத முதலீட்டாளர்கள் இருவரினால் நிர்மாணங்கள் முழுமையாக கொங்றீட் கட்டிடங்களை உடையதாக காணப்பட்டது. இதன் மூலம் செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட சுற்றாடல் மற்றும் இயற்கைத் தன்மைக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய வகையில் சுற்றுலா பயணிகளுக்கு வழங்குவதற்கு இடையூறாக இருந்தது.

**(உ) பங்களா மற்றும் முகாம்களை நிர்மாணித்தல்**

யால சுற்றுலா வலயத்தில் ‘‘சுற்றாடலுக்கு பசுமையான சுற்றுலா தங்குமிடங்களுக்காக காணிகளை ஒதுக்குதல்’’ என்பதன் கீழ் 2013 மார்ச் மாதம் 05 ஆம் திகதி இலக்கம் 13/0309/519/066 என்ற அமைச்சரவை பத்திரத்தின் மூலம் தங்குமிட கொட்டகைகளை நிர்மாணிப்பதற்கு மேலதிகமாக விடுதிகள் மற்றும் முகாம்களை நிர்மாணிப்பதற்கு அந்த பத்திரத்தில் 2.2.2.3 மற்றும் 2.2.3.3 பந்திகளின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்து கணக்காய்வுத் திகதியும் கிடைத்திருந்தும் கணக்காய்வுத் திகதியான 2022 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் 09 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்

போதிலும் அதன் பிரகாரம் விடுதி நிர்மாணிக்கப்பட்டு செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் படாதிருந்த போதும் ஐந்து செயற்திட்டங்களுக்காக முதலீட்டாளர்களில் மூன்று பேர்களுக்கு வாடகை உடன்படிக்கை 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் கைச்சாத்திடப்பட்டிருந்தது. முதலாவது கட்டத்தின் போது தங்குமிட கொட்டகைகளை நிர்மாணிப்பதற்கு உடன்படிக்கை செய்து அது தாமதமாக மேற்கொண்ட முதலீட்டாளர்கள் இருவரும் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

**(ஊ) முதலீட்டாளர்கள் தமது செயற்திட்டங்களை அமுல்படுத்தாமை.**

இந்தப் பத்திரத்தின் 2.2.1.1 பந்தியின் மூலம் முதலீடு முழுமையாக உள்நாட்டு அல்லது வெளிநாட்டு ஒத்துழைப்புடன் சமர்ப்பிக்க முடியுமாக இருந்ததுடன் ரூபா 300 மில்லியனுக்கு சமமான அல்லது அதற்கு மேற்பட்ட முதலீட்டினைக் கவனத்திற் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. 07 காணிக் கூறுகள் முதலீட்டாளர்களுக்கு வழங்குவதன் மூலம் வலயத்தில் ரூபா 2,100 மில்லியன் முதலீடொன்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 05 முதலீட்டாளர்கள் தமது செயற்திட்டங்களை அமுல்படுத்தாமையின் காரணமாக ரூபா 1,500 மில்லியன் முதலீடொன்று இந்த வலயத்தில் உருவாகின்றமை நிறுத்தப்பட்டிருந்தது. மேலும் இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட அறைகளின் இயலளவு மற்றும் வேலைவாய்ப்பை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது.

**(எ) சுற்றாடல் சார்ந்த தங்குமிடங்களில் வணிக ரீதியான செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமை.**

செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்குரிய முதலீட்டாளர்களுடன் அதிகார சபையினால் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் 12.1.1 பிரிவின் பிரகாரம் ஆரம்ப அறிவித்தல் விநியோகிக்கப்பட்ட திகதியில் இருந்து இருபத்தி நான்கு மாதங்கள் (24) அல்லது இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையால் இணங்கியிருந்த வேறொரு நீடிக்கப்பட்ட கால எல்லை முடிவடையும் திகதி அல்லது அதற்கு முன்னர் வணிக செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு வாடகையாளர் தவறியமையின் அடிப்படையில் உடன் படிக்கையை முடிவுறுத்துவதற்கு அதிகார சபைக்கு இயலுமை காணப்பட்டது. இதன் மூலம் செயற்திட்டத்தை வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்கு உதவும் வகையில் தெரிவு செய்யப்பட்ட முதலீட்டாளர்கள் மூலம் எதிர்பார்க்கப்பட்ட கால அட்டவணையில் செயற்திட்டத்தை முழுமையாக ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எனினும் நிர்மாணங்களைப் பூர்த்தி செய்யாத முதலீட்டாளர்கள் ஏழு பேருக்கும், நிர்மாணங்களை ஆரம்பிக்காத முதலீட்டாளர்கள் நான்கு பேருக்கும் ஆரம்ப அறிவித்தல் விநியோகிக்கப்பட்ட திகதியில் இருந்து 4-5 வருட காலத்திற்காக தொடர்ச்சியாக கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக சுற்றாடலுக்கு இசைவான தங்குமிடங்களில் வணிக ரீதியான செயற்பாடுகளை ஒரே தடவையில் ஆர்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அதனை நிறைவேற்றுவதற்கு முகாமைத்துவம் தவறி இருந்தது.

### 3.2.3 குச்சவெளி சுற்றுலா அபிவிருத்தி செயற்திட்டம்

2010 செப்டெம்பர் மாதம் 17 ஆம் திகதய 1671/29 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவில் 576 ஏக்கர் நில பிரதேசம் சுற்றுலா அபிவிருத்தி வலயமாக வெளியிடப்பட்டிருந்தது.

மீண்டும் 2011 மார்ச் 25 ஆம் திகதி இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிமேதகு சனாதிபதி அவரால் அதில் 387 ஏக்கர் அளவு இலவச கையளித்தலாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கு மானியமாக கையளிக்கப்பட்டிருந்தது.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) தகுதியான காணி இனங்காணல் மற்றும் கைப்பற்றல்**

அந்த வலயத்தில் 123 ஏக்கர் அளவான அரசாங்கத்தின் மூன்று காணிப் பகுதிகள் சுற்றாடல் அபிவிருத்தி உத்தேச திட்டத்திற்காக அரசாங்கத்தின் காணி கட்டளைச் சட்டத்தின் 6 ஆவது பிரிவின் பிரகாரம் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிப்பதற்கு சனாதிபதியின் அங்கீகாரம் கிடைத்தமை 2014 யூன் 04 ஆம் திகதிய இலக்கம் 4-2/5/31/5/8 என்ற கடிதத்தின் மூலம் காணி ஆணையாளர் நாயகத்தால் அறிக்கையிடப்பட்டிருந்தது.

எனினும் இதற்கான இலவச கையளித்தல் கொடுப்பனவுப் பத்திரம் சனாதிபதியால் 2020 ஆகஸ்ட் 14 ஆம் திகதி கையொப்பமிடப்பட்டிருந்தது. 2011 ஆம் ஆண்டில் இருந்து இந்தப் பிரதேசத்தில் காணி அதிகார சபைக்கு சொந்தமாக இருந்த போதிலும் உரிய பிரதேசம் மற்றும் செயற்திட்டத்தின் பின் புலன் தொடர்பாக உரிய ஆய்வுடன் பிரதான திட்டம் (Master Plan) தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் கையளித்தல் 09 வருடங்களுக்கு பின்னர் அதாவது 2019 ஆம் ஆண்டின் போதே கையளிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) திட்டம் தயாரித்தல்**

தயாரிக்கப்பட்ட பிரதான திட்டம் (Master Plan) இன் மூலம்

- காணிக் கூறு இலக்கம் (Block) 01, 02, 03, 04(1), 04,(2), 07(1), 07(2), 08 மற்றும் 09 என்பன சுற்றுலா ஹோட்டல் செயற்திட்டத்திற்காக முதலீட்டாளர்களுக்கு வாடகைக்கு வழங்குவதற்கு.
- வலயத்தில் தற்போது காணப்படுகின்ற மற்றம் ஸ்தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட பார்வையிடல் இடங்களை மேவுகை செய்யும் வகையில் நடை பாதை நிரல், துவிச்சக்கர வண்டி நிரல் உள்ளடக்கிய வீதி.
- திட்டத்தில் மத்தியபடுத்தப்பட்ட பிரதேசம் (Central Node) இலங்கை சுற்றுலா அதிகார சபை, வனப் பாதுகாப்புத் திணைக்களம், வன சீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அலுவலகம், வாகனத் தரிப்பிடம், சிற்றுண்டிச்சாலை, காட்டு யானை பார்வையிடல் பகுதி மற்றும் கரையோர பக்கம் விசைக்கான வீதி
- திட்டத்தின் கூறு இலக்கம் 05, 06(1) மற்றும் 06(2) காட்டு யானைகளுக்காக பாதுகாப்புப் பிரதேசம் ஒன்றாக.
- திட்டத்தின் கூறு இலக்கம் 05 இல் தற்போது காணப்படுகின்ற 02 குளங்களை விரிவுபடுத்துதலும் கூறு இலக்கம் 06(2) இல் காட்டு யானைகளுக்காக பாதுகாப்புப் பிரதேசமாக புதிய குளமொன்றை அமைப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டிருந்தது.

எனினும் உரிய காணி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்ட சந்தர்ப்பம் வரையிலும் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்கின்ற நிறுவனங்கள் தவிர எந்தவொரு முதலீட்டாளரும் கணக்காய்வுத் திகதி வரையிலும் நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிக்கா திருந்ததுடன் மேலே உத்தேசிக்கப்பட்ட எந்தவொரு செயற்பாடுகளுக்காகவும் தேவையான அடிப்படை திட்டமேனும் தயாரிப்பதற்கு அதிகாரசபை தவறியிருந்தது.

(இ) செயற்திட்டத்திற்காக காணியை ஒதுக்குதல் மற்றும் காணிக்காக அனுமதியற்ற நுழைவினை தடுத்தல்.

உரிய பிரதேசத்தில் எங்களால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்காக அதிகாரசபை போதியளவான கவனம் செலுத்தியிருந்தமை தென்படுகின்றது.

(i) காணி எல்லையை குறிப்பிடுவதற்கு நட்டப்பட்டிருந்த சில கொங்கிறீட் தூண்கள் சில இடங்களில் கழற்றி அகற்றப்பட்டிருந்ததுடன் சில தூண்கள் கீழே விழுந்து அல்லது கழற்றி கீழே போடப்பட்டிருந்ததுடன் காணிக் கூறு இலக்கம் 09 (Block 09) 03 ஏக்கர் காணியின் எல்லை தூண் ஏனும் நட்டப்பட்டிருக்கவில்லை. (நிழற்படம் இணைப்பு 04 இல் காண்பிக்கப்படுகின்றது.)

(ii) சில காணிப் பகுதிகளில் அனுமதியற்ற வேறு நபர்களினால் கைப்பெற்றப்பட்டு உரிமை கோராடப்பட்டிருந்தமை. மற்றம் சில காணிகளில் அனுமதியற்ற மரங்களாலான தூண்கள் நட்டப்பட்டு இருந்த முறை அவதானிக்கப்பட்டது. (நிழற்படம் இணைப்பு 04 இல் காண்பிக்கப்படுகின்றது.)

(iii) காணி ஊடாக மணல் போக்குவரத்துக்காக அனுமயற்ற வீதி ஒன்று அமைக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றமையும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் அதிகார சபையின் காணியின் நடுவே நுழைவு வீதி ஒன்று அமைக்கப்பட்டு உள்நுழைகின்ற இடத்தில் வாயிற் கதவி இரண்டும் அமைக்கப்பட்டிருந்தமையை காணக்கூடியதாக இருந்தது. (நிழற்படம் இணைப்பு 04 இல் காண்பிக்கப்படுகின்றது)

**(ஈ) செயற்திட்டத்தில் அபிவிருத்தி செய்யப்படவேண்டிய உட்கட்டமைப்பு வசதிகளை உள்ளடக்கிய ஏனைய வசதிகள்.**

பிரதேசத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்படாமை செயற்திட்டத்தை அமுல்படுத்தும் நன்மைக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தமை எங்களினால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின்போது இனங்காணக்கூடியதாக இருந்தது. அதன் பிரகாரம் பிரதானமாக இனங்காணப்பட்ட சில பிரச்சினைகள் பின்வருமாறு.

(i) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் தேசிய நீர் வழங்கல் இறக்கக் கண்டி பாலம் வரை மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்ததுடன் பிரதேசத்திற்கு பொது நீர் வழங்கல் காணப்படவில்லை.

(ii) கொழும்பை உள்ளடக்கிய ஏனைய பிரதேசங்களிலிருந்து குறைந்த காலத்தில் அல்லது இலகுவாக தொடர்புபடக்கூடிய வகையில் போக்குவரத்து வசதிகள் அபிவிருத்தி செய்யப்படாமை.

(iii) மின்சார சபையினால் தற்போது பிரதேசத்திற்கு வழங்கப்படுகின்ற மின்சார வழங்கல் செயற் திட்டத்திற்காக போதியளவாக இல்லாமையினால் வேறு வழங்கல்களைப் பெற்றுக் கொள்வதற்கான தேவை காணப்பட்டமை.

காணி கையேற்கப்பட்டு இற்றைக்கு 12 வருடங்கள் கடந்திருந்த போதிலும் மேற்கூறப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளிலுள்ள பிரச்சினைகளுக்காக முறையான தீர்வு அல்லது மாற்றுத் தீர்வை வழங்குவதற்கு அதிகாரசபை முன்வந்தமை போதியளவில் மேற்கொண்டிருந்தமை அவதானிக்கப்படாதிருந்ததுடன் முதலீட்டார்களுக்கு பொருத்தமான சுற்றாடலை ஸ்தாபிக்காமல் முதலீட்டாளர்களுடன் அவ்வப்போது உடன்படிக்கை செய்தல் மாத்திரம் செயற்திட்டத்தின் நோக்கத்தை எதிர்பார்க்க முடியாதிருந்தது.

**(உ) அதிகாரசபைக்குச் சொந்தமான காணியை முதலீட்டாளர்களுக்கு வாடகைக்கு வழங்குதல் மற்றும் அதற்குரிய வாடகையை அறவிடல்.**

‘‘சுற்றுலாக் கைத்தொழிலில் விரைவான அபிவிருத்தி’’ என்ற தொனிப்பொருளில் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திர இலக்கம் 11/0092/519/002 மற்றும் 2011 சனவரி 12 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தில் அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் குச்சவெளி சுற்றுலா அபிவிருத்தி வலயத்தில் அதிகாரசபைக்குச் சொந்தமான காணி ஒரு ஏக்கர் ரூபா 20 மில்லியன் வீதம் ஒரே தடவையில் செலுத்தப்படுகின்ற தொகையின் அடிப்படையில் 99 வருட காலத்திற்காக வாடகைக்கு வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மேற்கூறப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கு இணங்கும் வகையில் குச்சவெளி சுற்றுலா அபிவிருத்தி வலயத்தில் 30 ஏக்கர் காணிகள் 02 கம்பனிகளுக்கு 2011 ஆம் ஆண்டின் போது வாடகைக்கு வழங்கப்பட்டு ரூபா 600 மில்லியன் ஒரே தடவையில் செலுத்தும் பணம் ஒன்று வாடகையாளரிடமிருந்து அறவிட்டு ஒன்றிணைந்த நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. எனினும் அத் திகதியிலிருந்து 2021 மே 17 ஆம் திகதி வரை எந்தவொரு காணியையும் வாடகைக்கு வழங்குவதற்கு அதிகாரசபை தவறி இருந்தது.

(ii) மேலே குறிப்பிடப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின்படி சனாதிபதி செயலாளரின் 2010 பெப்ரவரி 03 ஆம் திகதிய இலக்கம் SP/RD/02/10 என்ற அரசாங்கத்தின் காணி முகாமைத்துவம் தொடர்பாக விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு 2019 யூன் 28 ஆம் திகதிய இலக்கம் 2019/05/21 என்ற மேலே குறிப்பிடப்பட்ட அமைச்சரவை பரிந்துரை காணப்படும் போது சனாதிபதி செயலாளரின் 2010 பெப்ரவரி 03 ஆம் திகதிய SP/RD/02/10 என்ற ‘‘அரசாங்கத்தின் காணி முகாமைத்துவம்’’ தொடர்பாக விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்புகு 2019 யூன் 28 ஆம் திகதிய இலக்கம் 2019/05/21 என்ற பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அதிகார சபையின் காணியை வாடகைக்கு வழங்கும் காலம் 99 வருடங்களுக்கு பதிலாக 30 வருடங்கள் அல்லது 50 வருடமாக மாற்றப்பட்டிருந்தது. பணிப்பாளர் சபை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அதிகார சபையின் காணியை வாடகைக்கு வழங்கும் காலம் 99 வருடங்களுக்கு பதிலாக 30 வருடங்கள் அல்லது 50 வருடமாக மாற்றப்பட்டிருந்தது.

(iii) நீண்ட காலமாக வாடகைக்கு வழங்குவதன் மூலம் கணிசமான தொகை ஒன்றை ஒரே தடவையில் செலுத்துவதற்கு ஏற்பட்டிருந்தமை முதலீட்டாளர்களுக்கு மாதாந்தம் சிறிய பெரளவு வாடகை ஒன்று மாத்திரம் நீண்டகாலம் அறவிடல் மூலம் அதிகார சபையின் வாடகை வருமானத்திற்கு பாதகமாக தாக்கமளிக்கக்கூடியதாக இருந்தமையும், அமைச்சரவைத் தீர்மானத்திற்கு முன்னர் விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கை ஏற்பாடுகள் அவ்வாறான அமைச்சரவைத் தீர்மானத்தை மாற்றாமல் அதற்கு இணங்கும் வகையில் பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானம் கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்தது.

**(ஊ) முதலீட்டாளர்கள் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல் மற்றும் அதிகார சபையின் மேற்பார்வை.**

2019 ஆம் ஆண்டின் போது செயற்திட்டத்திற்கான பிரதான திட்டம் (Master Plan) தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அதன் போது இந்த மொத்தக் காணியின் அளவான 510 ஏக்கரில்

136 ஏக்கர் அளவு காட்டு யானைகள் நடமாடுகின்ற பிரதேசமாக இருந்தமையின் காரணமாக முதலீட்டாளர்களுக்காக ஒருக்கப்பட்ட காணி அளவை நீக்குவதற்கு முன்மொழியப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மிகுதி காணி அளவிலும் 59 ஏக்கர் அளவு 2022 நவம்பர் 30 ஆம் திகதி வரையில் 04 முதலீட்டாளர்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு வாடகை அடிப்படையில் 15 ஏக்கர் காணிகளைப் பெற்ற ஒரு முதலீட்டாளர் மாத்திரம் தற்போது வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் அந்த நிறுவனத்தை உள்ளடக்கிய ஏனைய முதலீடுகளின் தற்போதைய நிலைமை பின்வருமாறு.

| **முதலீட்டாளரின் பெயர்** | **வாடகைக்கு வழங்கப்பட்ட காணியின் அளவு** | **வாடகைக்கு வழங்கப்பட்ட திகதி** | **தற்போதைய நிலைமை** |
|---|---|---|---|
| Jungle Beach Resorts (Pvt) Ltd | 15 | 2011/04/08 | 2012 ஆம் ஆண்டில் வியாபார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் தற்போது வியாபார நடவடிக்கைகள் நடாத்திச் செல்லப்படுகின்றது. |
| Mfar Hotel & Resorts (Pvt) Ltd | 20 | 2011/05/20 | தற்போது ஆரம்ப விடுவிப்பு (Primary Clearance) பெற்றுக் கொள்வதற்கு ஆரம்ப விண்ணப்பப்பத்திரம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| Negambo Holiday Resorts (Pvt) Ltd | 14 | 2021/05/17 | செயற்திட்டத்திற்காக ஆரம்ப விடுவிப்பை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதும் இதுவரை சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை (EIA) பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| Solana Invesment (Pvt) Ltd | 10 | 2022/04/18 | 06 மாதங்களில் ஆரம்ப விடுவிப்பு பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் இதுவரை அதற்காக விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படவில்லை. |

அதன் பிரகாரம் முதலீட்டாளர்களுடன் உடன்படிக்கை செய்யப்பட்டவுடன் குறித்துரைத்த காலத்தில் செயற்திட்டத்திற்காக அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததா எனவும் குறித்துரைத்த காலத்தில் நிர்மாணங்களை ஆரம்பித்து பூர்த்தி செய்யப்பட்டிருந்ததா என்பது தொடர்பாகவும் அதிகார சபையின் மேற்பார்வை உரிய பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததா என்பதும் கணக்காய்வில் பிரச்சினையுடையதாக இருந்தது.

**(எ) முதலீட்டாளர்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதும் செயற்திட்டத்தை அமுல்படுத்தாக காணிகள் மற்றும் வாடகைக்கு வழங்கப்படாத காணிகள் தொடர்பாக அதிகார சபை எடுத்த நடவடிக்கைகள்.**

செயற்திட்டத்தின் 20 ஏக்கர் காணி 99 வருட வாடகை அடிப்படையில் 2011 மே 20 ஆந் திகதி Mfar Hotel & Resorts (Pvt) Ltd இற்கு வழங்கப்பட்டிருந்தது. உரிய வாடகை உடன்படிக்கையின் 12.1.1 பிரிவின் பிரகாரம் 05 வருடங்களுக்குள் வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் அவ்வாறு இல்லையாயின்

உடன்படிக்கை இரத்துச் செய்ய முடியும். எனினும் அதன் பின்னரும் நிறுவனத்தால் பல்வேறு காரணங்களைக் குறிப்பிட்டு உரிய கால எல்லை நீடிப்பு மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைக்காக அதிகார சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. எனினும் 11 வருடங்கள் கடந்திருந்த போதிலும் இதற்காக உரிய செயற்திட்டத்திற்கான ஆரம்ப அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் அதிகார சபையும் அதற்காக சரியான நடவடிக்கை எடுத்திருந்தமையும் அவதானிக்கப்படவில்லை.

**(ஏ) வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமை.**

அதிகார சபைக்கு காணி கையேற்பதற்கு முன்னர் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நிறுத்தப்பட்டிருந்த Nilaweli Hotel Management (Pvt) Ltd மற்றும் Seth-Ru-Ma Ayurveda Paradise (Pvt) Ltd என்ற நிறுவனங்கள் இதுவரை அதிகாரசபையுடன் வாடகை உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் அதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் இதுவரை அதிகார சபையால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் தற்போது Nilaweli Hotel Management (Pvt) Ltd நிறுவனம் நிர்மாணித்தல் நடவடிக்கைகளை அநேகமாக பூர்த்தி செய்திருந்தமை எங்களால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போதும் அவதானிக்கப்பட்டது. (நிழற்படம் இணைப்பு 04 இல் காண்பிக்கப்படுகின்றது.)

**3.2.4 தெத்துவ சுற்றுலா அபிவிருத்தி செயற்திட்டம்.**

தென்மேற்கு கரையோரப் பகுதியில் சுற்றுலா கவர்ச்சிகரமான இடமாக இனங்காணப்பட்ட பெந்தோட்டை சார்ந்த சுற்றுலா பயணிகள் தங்கியிருக்கும் காலத்தை அதிகரித்துக் கொள்வதற்கு சுற்றுலா பயணிகளை கவரக்கூடிய பல்வேறு வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான நிலக் கூறுகள் முதலீட்டாளர்களுக்கு வழங்கும் நோக்கில் பெந்தோட்டை சுற்றுலா விடுதியில் இருந்து 2.5 கிலோ மீற்றர் அளவிலான தூரத்தில் அமைந்துள்ள தெத்துவ குளத்தைச் சார்ந்த 4000 ஏக்கர் தரிசுநிலப் பிரதேசத்தைக் கைப்பெற்றி சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசமொன்றாக அபிவிருத்தி செய்வதற்கு 2002 ஆம் ஆண்டின் போது முன்னாள் காணப்பட்ட சுற்றுலா அபிவிருத்தி சபையினால் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) தகுதியான காணிகளை இனங்காணல், கைப்பெற்றும் செயற்பாடுகள் மற்றும் செயற் திட்டத்திற்காக ஒதுக்கீட்டின் செயற்திறன் மற்றும் வினைத்திறன்.**

(i) முதலாவது தடவை கலந்துரையாடல் 2002 பெப்ரவரி 05 ஆம் திகதி நடைபெற்றதுடன் அதன் போது ''சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசம் ஒன்றாக'' வெளியிடுவதற்கு முன்மொழியப்பட்ட போதிலும் கணக்காய்வுத் திகதி வரையிலும் சட்டத்தின் பிரகாரம் அவ்வாறான பிரதேசமொன்றாக பெயரிடுவதற்கு அதிகார சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) 2004 செப்டெம்பர் 10 ஆம் திகதிய இலக்கம் அமப/04/0992/005/007 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் முதலாவது கட்டத்தில் 1200 ஏக்கர் கைப்பெற்றுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் கைப்பெற்றல் கிரயமாக ரூபா 30 மில்லியன் தொகை 2004 ஆகஸ்ட் 27 இல் அதிகார சபையால் பெந்தோட்டை பிரதேச செயலகத்தில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. எனினும் காணி அமைச்சு விரைவாக பதிலளிக்காமை, பிரதான திட்டம் சமர்ப்பித்தலில் தாமதம், சாத்தியவள ஆய்வின் பிரகாரம் சில நிலக் கூறுகள் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பொருத்தமில்லாதிருந்தமை, போன்ற பல்வேறு விடயங்களின் காரணமாக ஏற்பட்ட தாமதத்தால் அமைச்சரவைத் தீர்மானத்திற்கு முரணாக நிதியை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு சபை தீர்மானித்த போதிலும் 2005 ஆகஸ்ட் 03 ஆம் திகதி காணியைக் கைப்பெற்றுவதற்கு கட்டளை கிடைத்ததன் காரணமாக மீண்டும் கைப்பெற்றல்

நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருட தாமதத்தின் பின்னராக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) செயற்திட்டத்திற்காக பிரதான திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு சபையை தொடர்பு கொள்ளுமாறு, ஆலோசனைச் சேவை நிறுவனங்களுடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையில் உடன்படிக்கைக் காலம் 03 மாதமாக இருந்த போதிலும் ஆரம்ப அறிக்கை மாத்திரம் சமர்ப்பிப்பதற்கு ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்ததுடன் அதுவும் அநேகமான குறைபாடுகளுடன் ஏற்றுக்கொள்ளக்கூடிய மட்டத்தில் காணப்படாத அறிக்கையாக இருந்ததாக தொழில்நுட்ப மதிப்பீடுக் குழு பரிந்துரை செய்தமையால் உடன்படிக்கையை கைவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக 2005 மார்ச் 31 ஆம் திகதி உரிய நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் கணக்காய்வுத் திகதி வரையிலும் பிரதான திட்டம் ஒன்று கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு அதிகார சபை தவறியிருந்தது.

(iv) கருத்திட்டம் சுற்றாடல் மதிப்பீட்டின் பிரகாரம் செயற்திட்டத்தில் உருவாக்கக்கூடிய ஆகக் கூடிய சுற்றுலா பணிகளுக்கு 100 அறைகளின் எண்ணிக்கையாக இருந்தமை, காணிக் கைப்பெற்றுவதற்கு ரூபா 100 மில்லியனுக்கு மேற்பட்ட செலவினம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கு கணிசனமான தொகையொன்றை செலவிட்டமையின் காரணமாக செயற்திட்டத்துடன் ஒப்பிடும் போது பொருளாதார நலன்கள் மிகவும் குறைந்திருந்தமை சுற்றாடல் முறைமையினால் நிர்மாணிப்பதற்காக பயன்படுத்தக்கூடிய காணி குறைவடைந்தமை போன்ற விடயங்களின் காரணமாக செயற்திட்டத்தைக் கைவிடுவதற்கு அதிகார சபை 2010 சனவரி 17 ஆம் திகதி அமைச்சரவைக் கூட்டத்தின் போது அந்தப் பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது தீர்மானம் எடுத்திருந்தது. எனினும் அது வரையிலும் கணிசமான தொகையொன்று கைப்பெற்றல் நடவடிக்கைகளுக்காக அதிகாரசபை செலவிட்டிருந்தது.

(v) அமைச்சின் வழிகாட்டலின் பிரகாரம் மீண்டும் கைப்பற்றும் செயற்பாடுகள் ஆரம்பித்து தனியார் காணிகளில் 567.219 ஹெக்டேயருக்காக காணி கைப்பெற்றல் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் இழப்பீட்டை வழங்குதல் 2011 யூலை 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும் 12 வருடங்கள் கடந்திருந்த போதிலும் கணக்காய்வுத் திகதி வரையிலும் உரித்துக்கள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக இழப்பீட்டுக் கொடுப்பனவு நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(vi) செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படுகின்ற சுற்றுலா விடுதிகளுக்கு வருகை தருகின்ற சுற்றுலா பயணிகளுக்கு கடற்கரையோரங்களுக்குச் செல்வதற்கு இடவசதிகள் காணப்படாதிருந்தமை. பின்னர் இனங்காணப்பட்டமையால் மேலும் 11.8652 ஹெக்டேயர் நில அளவைக் கைப்பெற்றுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் 2017 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்காக இலக்கம் 2070/29 என்ற 2018 மே 10 ஆம் திகதிய அதி விஷேட வர்த்தமானியின் மூலம் சுற்றுலா அபிவிருத்தி பணிகளுக்காக காணி கைப்பற்றல் சட்டத்தின் 49(அ) பிரிவிற்கு இணங்க தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் கணக்காய்வுத் திகதி வரையிலும் கைப்பற்றல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(vii) காணி கைப்பற்றலின் 7 ஆவது பிரிவின் கீழ் 1580/16 ஆம் இலக்க 2008 திசெம்பர் 18 ஆந் திகதி அதி விஷேட வர்த்தமானியின் மூலம் இலக்கம் 3608 என்ற ஆரம்ப நில வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள மொத்த அளவில்

694.54 ஹெக்டேயர் (1716 ஏக்கர்) அளவான 107 காணிக் கூறுகளை கைப்பற்றி 2017 நவம்பர் 28 ஆந் திகதி காணி கைப்பற்றல் சட்டத்தின் 44 ஆவது பிரிவின் கீழ் கையளித்தல் சான்றிதழ் பத்திரம் மூலம் அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும் 2021 யூலை வரையிலும் கையளிக்கப்பட்ட காணி அபிவிருத்தி பணிகளுக்காக ஈடுபடுத்தப்படாதிருந்ததுடன் அந்தக் காணியில் அமைந்துள்ள 40 பேர்ச் அளவிலான பரப்பளவுடை நிலத்தில் வர்ண மீன்கள் உற்பத்தி செய்வதற்காக அனுமதியற்ற வகையில் பயன்படுத்தப்படுகின்றமை பெந்தோட்டை பிரதேச செயலாளர் மூலம் 2021 யூலை 16 ஆந் திகதிய இலக்கம் பென்/2/7/3/1/1/பொது என்ற கடிதத்திலும் மற்றும் காணி உரிமையாளர்களுக்கு இழப்பீட்டுப் பணம் செலுத்தி அரசாங்கத்திற்கு கையேற்கப்பட்ட வயற் காணிகளில் வீடமைத்தல் தொடர்பாக 2022 சனவரி 25 ஆம் திகதிய கடித மூலமும் அறிவிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக அதிகார சபை எடுத்த நடவடிக்கைகள் கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்படவில்லை.

(viii) செயற்திட்டத்தை ஆரம்பித்து 20 வருடங்கள் கடந்திருந்த போதிலும் கணக்காய்வு திகதி வரையிலும் காணி வாடகைக்கு வழங்குவதற்கு அதிகார சபை தவறியிருந்ததுடன் தற்போது நில அளவையாளர் அதிபதியின் (Surveyor General) இலக்கம் கா. 3608 என்ற ஆரம்ப நில வரைபடத்தின் பிரகாரம் 1716 ஏக்கர் காணிகளில் வனக் காடுகளில் மீண்டும் அந்த எல்லையில் திறந்து எல்லைத் தூண் நட்டுதல் மேற்கொள்ளப்படுகின்றது.

**(ஆ) செயற்திட்டத்தை இனங்காணல், முதலீட்டினை கவருதல் மற்றும் தெரிவு செய்தல்.**

(i) 1950 இன் 09 ஆம் இலக்க காணி கைப்பற்றல் சட்டத்தின் 49 ஆவது பிரிவிற்கு இணங்க 1968 இன் 14 ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்தி சட்டத்தின் 2(1) இன் பிரகாரம் கட்டளை ஒன்றாக சுற்றுலா அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக திட்டமிடப்பட்ட ஆரம்ப கட்டத்தின் பிரகாரம் 1200 ஏக்கர் காணி கைப்பெற்றுதல் அங்கீகரித்து இலக்கம் 1247/22 என்ற அதி விஷேட வர்த்தமானி பத்திரம் 2002 ஆகஸ்ட் 02 ஆம் திகதி வெளியிடப்பட்டிருந்தது. எனினும் திட்டமிடப்பட்ட கட்டத்தை மாற்றி புதிய கட்டமாக 2000 ஏக்கர் அளவை அபிவிருத்தி செய்வதற்கு 2002 திசெம்பர் 12 ஆம் திகதி முதலீட்டாளர்களுக்காக அழைப்பு விடுத்து பத்திரிகை அறிவித்தல் பிரசுரிப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருந்தது. எனினும் அது வரையிலும் பிரதேசத்தின் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி, பிரதான திட்டம் (Master Plan) அல்லது எந்தவொரு காணி கைப்பெற்றல் தொடர்பாகவும் மேற்கொள்ளப்பட் டிருக்கவில்லை.

(ii) 2003 பெப்ரவரி 05 ஆம் திகதிய இலக்கம் 2003/8 என்ற அமைச்சரவை குறிப்பில் ஒரு கம்பனிக்கு 2000 ஏக்கர் வாடகைக்கு வழங்குவதற்கு அங்கீகாரம் கோரப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு அங்கீகாரமும் சமர்ப்பிக்கப்பட்ட அந்த கம்பனியின் செயற்திட்ட முன்மொழிவு ஏற்றுக்கொள்ளக்கூடிய திருப்திகரமான மட்டத்தில் காணப்படாதிருந்தமையால் அதில் 05 மாதங்களுக்குப் பின்னர் 2003 யூலை 28 ஆம் திகதிய கடித மூலம் இலங்கை முதலீட்டு சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. மேலும் அந்தக் குறிப்பில் உள்ளடக்கப்பட்ட மேலும் இன்னுமொரு முதலீட்டாளரின் செயற்திட்டம் முன்மொழிவு செயல் நடவடிக்கை மட்டத்தில் செயற்பாட்டு நிலையில் காணப்படாமையின் காரணமாக உரிய கோவையை மூடுவதற்கு ஏற்பட்டிருந்ததாக அதன் இரண்டு வருடங்களின் பின்னர் 2004 ஆகஸ்ட் 20 ஆந் திகதிய கடிதம் மூலம் முதலீட்டு சபை

அறிவித்திருந்தது. எனினும் இது தொடர்பாக அதிகாரசபை எந்தவொரு பின் தொடர்கையும் மேற்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை.

(iii) செயற்திட்டத்தின் முதலாவது கட்டத்திற்காக அமெரிக்க டொலர் 2.3 பில்லியன் முதலீட்டாளர்களை உடைய செயற்திட்ட முன்மொழிவு நிபந்தனையுடன் பரிந்துரை செய்வதற்கு அதிகார சபை நியமித்த அபிவிருத்தி முன்மொழிவு மதிப்பீட்டுக் குழு தீர்மானித்திருந்தது. வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு முன் உரிய முதலீட்டாளருக்கு அமெரிக்க டொலர் 500 மில்லியன் தொகை உள்நாட்டு வங்கி ஒன்றில் வைப்புச் செய்வதற்கு நிபந்தனையில் உடன்பட்டிருந்தது. எனினும் குறித்த கால எல்லையில் 2022 மே வரை நீடிக்கப்பட்ட போதும் 2022 யூன் 30 வரையிலும் உரிய பணம் வைப்புச் செய்வதற்கு முதலீட்டாளர் தவறியிருந்தமையால் உரிய செயற்திட்ட முன் மொழிவுகளை நீக்குவதற்கு அதிகார சபை நடவடிக்கை எடுத்திருந்தது. எனினும் கணக்காய்வுத் திகதி வரையிலும் செயற்திட்டத்திற்காக முதலீட்டாளர் ஒருவர் அதிகார சபையால் தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.2.5 பாசிக்குடா சுற்றுலா அபிவிருத்தி செயற்திட்டம்.

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையால் பாசிக்குடா தேசிய விடுமுறை விடுதி வளவில் உள்ள காணியை வாடகைக்கு வழங்குவதற்காக 14 கம்பனிகளுடன் உடன்படிக்கை செய்திருந்ததுடன் அதில் 12 கம்பனிகள் தற்போது வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

உரிய செயற்திட்டத்திற்கான பிரதான திட்டம் தயாரிப்பதற்கு Sri Lanka Institute of Architect மற்றும் Design Consortium (Pvt) Limited என்ற நிறுவனங்களுடன் முத்தரப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் பிரதேசத்தில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி செயற்பாடுகள் மற்றும் ஸ்தாபிக்கப்பட வேண்டிய தேவைகள் இனங் காணப்பட்டிருந்தது. அவ்வாறே இனங்காணப்பட்ட உரிய வசதிகள் இணைப்பு 05இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் எங்களால் உரிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**வசதிகளை ஸ்தாபித்தல்.**

(அ) அவ்வாறு இனங்காணப்பட்ட வசதிகளில் தற்போது ஸ்தாபிப்பதற்கு மலமகற்றும் சுத்திகரித்தல் முறைமை, நீர்த்தாங்கி, விடுதி அலுவலகம் மற்றும் மலசல கூடம் மற்றும் குளியலறை வசதிகளுடன் கட்டிடங்கள் மாத்திரமே ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படடிருந்த போதும் திட்டமிடப்பட்ட பிரகாரம் ஏனைய வசதிகளை ஸ்தாபிக்காமையின் காரணமாக அந்த கட்டிடமும் தற்போது பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் மூடப்பட்டிருந்தது. (நிழற்படம் இணைப்பு 06 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.)

(ஆ) வார இறுதி நாட்களில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் 300 இற்கும் 500 இற்கும் இடையிலான அளவொன்று பிரதேசத்திற்கு வருகை தருகின்றமையும் அவர்களுக்காக தற்போது காணப்படுகின்ற வசதிகள் போதியளவு இல்லாதிருந்தமையும் எங்களால் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டதுடன் அவ்வாறு இனங்காணப்பட்ட குறைபாடுகள் பின்வருமாறு.

(i) பிரதான திட்டத்தில் குறித்துரைத்த இடங்களில் பொது வாகனத் தரிப்பிடத்தை ஸ்தாபிக்காதிருந்ததுடன் தற்போது பயன்படுத்தப்படுகின்ற வாகனத் தரிப்பிடமும்

மழை நாட்களில் பயன்படுத்த முடியாதிருந்தமையும் மிகவும் அழுக்கான நிலையில் காணப்படுகின்றமையும் அவதானிக்கப் பட்டது.

(ii) வாகனத் தரிப்பிடம் தற்போது பயன்படுத்தப்படுகின்ற சிறிய இரண்டு மலசல கூடங்களைக் காணக்கூடியதாக இருந்ததுடன் அவற்றை பயன்படுத்துவதற்கு முடியாத நிலையில் மிகவும் அசுத்தமான நிலையில் காணப்பட்டதுடன் குளியலறை வசதிகளோ அல்லது ஆடை மாற்றும் இடங்களோ குறித்துரைத்த இடமொன்று பிரதேசத்தில் காணப்படவில்லை.

(iii) கட்டிட வளவிற்குள் அனுமதியற்ற நுழைவினைத் தடுப்பதற்கான திட்ட முறைமை யொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் அதனால் பிரதேசத்தில் நிரந்தரமாக நடமாடுகின்ற நாய்கள் மற்றும் மாடுகள் பிரதேசத்தின் சுத்தத்திற்கும் மற்றும் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iv) சூழலில் பயணம் செய்வதற்காக காணப்பட்ட சில வழிகள் தார் இடப்பட்ட ஒரு பகுதி கழன்று குழிகள் ஏற்பட்டிருந்ததுடன் சில வீதிகள் மழை நாட்களில் சேறு நிரம்புவதன் காரணமாக பயணம் செய்யும் போது வசதியீனத்திற்கு உட்பட்டிருந்தமை தெளிவாக தென்பட்டது.

(v) அவ்வாறே அந்த வீதிகளுக்காக மின் விளக்குகளை வழங்குவதற்கு 210 மின் விளக்கு தூண்கள் 2016 ஆம் ஆண்டின் போது அதிகார சபையால் ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதும் அதுவும் தற்போது வரையிலும் செயற்படு நிலையில் காணப்படாதிருந்தமையை காணக் கூடியதாக இருந்தது. அவ்வாறே அதில் அநேகமாக அவற்றில் பெற்றரி களவாடப் பட்டிருந்ததுடன் அவற்றின் சூரிய வலு பெணல் (Solar Pennal) கழற்றி வேறாக வைக்கப்பட்டிருந்தது.

(vi) தற்போது பயன்படுத்தப்படுகின்ற வாகனத் தரிப்பிடத்திலிருந்து பொது கரையோரத்திற்கு நுழைகின்ற வீதிகள் மழை நாட்களில் வெள்ளத்திற்கு உட்படுவதுடன் அதனிடையே பயணம் செய்வதற்காக தயாரிக்கப்பட்ட தற்காலிக பலகைப் பாலம் 06 மாதங்களில் இருந்து பலகை கழன்று உடைந்த நிலையில் பயன்படுத்த முடியாத நிலைக்கு உட்பட்டிருந்தது.

(vii) பிரதேசத்தில் சுற்றுலா பயணிகளுக்கு குடிப்பதற்கு நீர் வசதிகள் வழங்கப்பாடதிருந்ததுடன் உணவினைப் பெற்றுக்கொள்வதற்கு ஒதுக்கப்பட்ட இடமொன்று காணப்படாமையினால் சுற்றுலா பயணிகள் வசதியீனத்திற்கு உட்பட்டிருந்தமை எங்களால் தெரிவுப் பரிசோதனையின் போது தெளிவாக தென்பட்டது.

(viii) வலயத்தில் பிரதான சுற்றுலா பொலீஸ் பிரிவொன்று மற்றும் கரையோர வலயத்தில் பொலீஸ் உயிர் காப்பு பாதுகாப்பு அலகுகள் 05 என்பன ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதும் அவர்களுக்காக தேவையான வசதிகள் உரிய பிரகாரம் வழங்கப்பட்டிருந்தமையை காணக் கூடியதாக இருக்கவில்லை. அவ்வாறே சுற்றுலா பொலீஸ் பிரிவினாலும் அவ்வப்போது மேற்கூறப்பட்ட சில குறைபாடுகள் தொடர்பாக அதிகார சபைக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்ட போதும் அதற்காகவும் இதுவரையிலும் கவனம் செலுத்தப்படாதிருந்தமை கணக்காய்வில் தெளிவாகின்றது.

## 4. பரிந்துரை

(அ) 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் பிரகாரம் சுற்றுலா அபிவிருத்தி பிரதேசமொன்றாக வெளியிடுதல் மற்றும் சுற்றுலா பயணிகளுக்கு தாங்கள் கருதுகின்ற கவர்ச்சிகரமான இடங்கள் அதற்குள் உள்ளடக்கிய அதிகார சபையின் பரிந்துரையின் அடிப்படையில் செயற்படுதல்.

(ஆ) புதிய சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசங்களை இனங்கண்டு வெளியிடுதல்.

(இ) 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் சட்டத்தின் 26(3) ஆம் பிரிவின் பிரகாரம் சுற்றுலா அபிவிருத்தி பிரதேசமொன்றாக உள்ளடக்கி முடியுமான சுற்றுலா நடவடிக்கைகள், வணிக மற்றும் ஏனைய நடவடிக்கைகளை தீர்மானித்து கட்டளை இடல் வேண்டும்.

(ஈ) அதிகாரசபையின் நேரடியான நிதி ஏற்பாட்டின் அடிப்படையில், உரிய நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களையும் நெருங்கிய வகையில் மேற்பார்வை செய்தல் மற்றும் ஆக்கபூர்வமாக அமுல்படுத்தி சுற்றுலா அபிவிருத்தி வலயமொன்றுக்குரிய புதிய வசதிகளை ஸ்தாபிப்பதற்கோ அல்லது காணப்படுகின்ற வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கோ போதியளவான கவனம் செலுத்துதல்.

(உ) சுற்றுலா அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் காணியினை வாடகைக்கு வழங்கும் போது முதலீட்டாளர்களை முறையான திட்டத்தின் பிரகாரம் தெரிவு செய்ய வேண்டியிருந்தமை மற்றும் வாடகைக் காணியில் குடியிருக்கின்றவர்கள் தொடர்பான பிரச்சினைகள், அங்கீகாரம் பெற்றுக்கொள்ளுதல் தொடர்பான பிரச்சினை, முதலீட்டு விண்ணப்பம் சமர்ப்பித்தலில் பிரச்சினை போன்ற முதலீட்டாளர்கள் முகங்கொடுக்கின்ற பிரச்சினைகளுக்காக அதிகாரசபையால் போதியளவாக முன்னின்று நடவடிக்கை எடுத்தல்.

(ஊ) முதலீட்டு சொத்துக்கள் தொடர்பாக போதியளவான பிரசாரம் திட்டங்கள் தயாரிக்க வேண்டியிருந்தமை மற்றும் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ள வேண்டியமை, முதலீட்டு ஆதனங்கள் சுற்றுலா அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக ஒதுக்குவதற்கும் மற்றும் காணிகளுக்காக அனுமதியற்ற நுழைவினைத் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்தமை, முதலீட்டாளர்களினால் வாடகைக்கு பெறப்பட்ட ஆதனங்களில் மேற்கொள்ளப் படுகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் அவற்றப் பேணிச் செல்லல் தொடர்பாக போதியளவான மேற்பார்வை செய்ய வேண்டியிருந்தமை மற்றும் குறைவாகப் பயன்படுத்தப் பட்ட முதலீட்டு ஆதனங்களை விரைவாக முதலீட்டு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(எ) ஏனைய அரசாங்க நிறுவனங்களுடன் சீரான தொடர்பினைப் பேணிச் செல்வதன் மூலம் சுற்றுலா பயணிகளுக்கான வசதிகள் மற்றும் கவர்ச்சியினைக் கட்டியெழுப்புதல்.

(ஏ) உடன்படிக்கையின் பிரகாரம் செயலாற்றல் பிணைமுறி குறித்துரைத்த பிரகாரம் பெற்றுக் கொள்ளல், நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு உரிய மற்றும் விரைவாக நடவடிக்கை எடுத்தல் மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காத

முதலீட்டாளர்களின் ஆதனங்கள் உடன்படிக்கை இரத்துச் செய்து சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருந்தமை மற்றும் நட்டத்தை அறவிட வேண்டி இருந்தமை.

(ஐ) முதலீட்டாளர்களினால் உரிய சுற்றாடல் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததா எனவும், நிர்மாணங்கள் பசுமை நிலைமையில் காணப்படுகின்றதா எனவும் மேற்பார்வை செய்ய வேண்டி இருந்தமை.

ஒப்பம்./டபிள்யூ. பீ. சீ. விக்ரமரத்ன.
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி**

**2024 சனவர் 12 ஆந் திகதி**

**இணைப்பு 01**

**சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசமாக பெயரிடப்பட்ட காணி**

| | வர்த்தமானி இலக்கம் | திகதி | பிரதேசம் |
|---|---|---|---|
| **1** | 478 | 1987.10.30 | ஹிக்கடுவ |
| **2** | 502/27 | 1988.04.20 | உனவெட்டுன |
| **3** | 710 | 1992.04.10 | கல்கிஸ்ஸ |
| **4** | 1128/6 | 2000.04.20 | பின்னவல |
| **5** | 1247/9 | 2002.07.31 | நீர்கொழும்பு |
| **6** | 1247/9 | 2002.07.31 | பேருவளை |
| **7** | 1255/23 | 2002.09.26 | நிலாவெளி/ உப்புவெளி |
| **8** | 1259/3 | 2002.10.21 | மாதுகங்கை |
| **9** | 1272/2 | 2003.01.20 | அருகம்பே |
| **10** | 1272/2 | 2003.01.20 | திருகோணமலை |
| **11** | 1272/2 | 2003.01.20 | கல்குடா |
| **12** | 1508/18 | 2007.08.01 | கற்பிட்டி |
| **13** | 1671/29 | 2010.09.17 | குச்சவெளி |
| **14** | 2147/43 | 2019.10.29 | இரணவில |

**இணைப்பு இலக்கம் 02**

**2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் சனாதிபதி இலவச கொடுப்பனவாக அதிகார சபைக்கு கையளிக்கப்பட்ட கற்பிட்டியில் 12 தீவுகளுக்குரிய காணிகள் தொடர்பான விபரம்.**

| தொடர் இலக்கம் | தீவுகள் | இலவச கொடுப்பனவின் மூலம் காணி வழங்கப்பட்ட திகதி | காணியின் அளவு (ஏக்கர்) | மொத்தம் (ஏக்கர்) |
|---|---|---|---|---|
| 01 | இப்பன்தீவு | 2010.10.29 | 114.36 | |
| | இப்பன்தீவு | 2010.11.01 | 38.15 | 152.51 |
| 02 | வெல்லை – 1 | 2010.11.01 | 3.69 | |
| 03 | வெல்லை – 11 | 2010.11.01 | 22.53 | |
| 04 | வெல்லை – 111 | 2010.11.01 | 32.52 | 58.74 |
| 05 | சின்ன இரமதீவு | 2010.11.01 | | 5.22 |
| 06 | இரமத்தீவு மேற்கு | 2010.11.01 | | 10.5 |
| 07 | சின்ன ஆரச்சல் | 2010.11.01 | | 41.1 |
| 08 | இரமதீவு | 2010.10.29 | 38.41 | |
| | இரமதீவு | 2010.11.01 | 185.38 | 223.79 |
| 09 | பத்தலஙண்குண்டு | 2010.11.01 | | 291.85 |
| 10 | உச்சமுனை | 2012.04.17 | | 1096.19 |
| 11 | பெரிய ஆரச்சல் | 2010.11.01 | | 109.75 |
| 12 | காக்கா தீவு | 2010.11.01 | | 67.08 |
| | | | | 2056.73 |

**இணைப்பு இலக்கம் 03**

**காணி வாடகைக்கு வழங்குதல்**

| தொடர் இலக்கம் | தீவுகள் | இலவச கையளித்தல் மூலம் காணி வழங்கப்பட்ட திகதி | காணியின் அளவு (ஏக்கர்) | வாடகைக்கு பெற்றவர் | காணி வாடகைக்கு வழங்கப்பட்ட திகதி | வாடகைக்கு வழங்கப்பட்ட காணியின் அளவு (ஏக்கர்) | வியாபார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதாக என்பது தொடர்பாக | வியாபார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமைக்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | இப்பதன்தீவு | ,2010.10.29 2010.11.01 | 152.51 | கியூப் லங்கா லேசர் புரப்பட்டீஸ் தனியார் கம்பனி | 2010.09.02 | 142.5 | இல்லை | தீவில் குடியிருக்கின்ற மீன்பிடி மக்கள் தொடர்பான பிரச்சினைகள், முதலீட்டு நடவடிக்கைகளுக்காக மாற்று காணியினை வழங்குமாறு அதிகார சபையிடம் கோரப்பட்டிருந்தமை. |
| 02 | வெல்லை – 1 | 2010.11.01 | 58.74 | சன் ரிசோட் இன்வெஸ்ட் மன் லங்கா தனியார் கம்பனி | 2011.07.13 | 58.74 | இல்லை | நீர் சுற்றுலா விடுதி மற்றும் நீர் விடுதிகளின் மூலம் உள்ளடங்கிய சுற்றுலா விடுதி 50 இனை உடைய அதி சொகுசு சுற்றுலா விடுதிகளை நிர்மாணிப்பதற்கு தேவையான அங்கீகாரம் பெற வேண்டிய முறை தொடர்பாக அதிகார சபைக்கு உரிய பிரகாரம் அனுபவம் காணப்படாமை. |
| 03 | வெல்லை – 11 | 2010.11.01 | | | | | | |
| 04 | வெல்லை – 111 | 2010.11.01 | | | | | | |
| 05 | சின்ன இரமதீவு | 2010.11.01 | 5.22 | சமகி ஹோட்டல் அன் ட்ரவல்ஸ் தனியார் கம்பனி | 2020.12.14 | 5.22 | இல்லை | அதிகார சபையில் முதலீடு தொடர்பான செயல் கைநூல் 0.13.(ஊ) இன் பிரகாரம் முதலீட்டாளர்களினால் தேவையான ஆவணங்களுடன் விண்ணப்பம் முதலீடு தொடர்பான பிரிவிற்கு சமர்ப்பித்து விடுவித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளாமை மற்றும் அதற்காக போதியளவான கவனம் அதிகார சபையின் மூலமும் |
| 06 | இரமதீவு மேற்கு | 2010.11.01 | 10.5 | | 2022.03.04 | 10.5 | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | மேற்கொள்ளாமை. |
| 07 | சின்ன ஆரச்சல் | 2010.11.01 | 41.1 | நியூ கியர்ஸ் இன்னடர்நெசனல் தனியார் கம்பனி | 2022.04.20 | 41.1 | இல்லை | அதிகார சபையில் முதலீடு தொடர்பான செயல் கைநூல் 0.13.(ஊ) இன் பிரகாரம் முதலீட்டாளர்களினால் தேவையான ஆவணங்களுடன் விண்ணப்பம் முதலீடு தொடர்பான பிரிவிற்கு சமர்ப்பித்து விடுவித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளாமை மற்றும் அதற்காக போதியளவான கவனம் அதிகார சபையின் மூலமும் மேற்கொள்ளாமை. |
| 08 | இரமதீவு | ,2010.10.29 2010.11.01 | 223.79 | கன்சல்ட்டன் இன்ஜினியர்ஸ் மற்றும் ஆக்கிடெக் தனியார் கம்பனி, | 2022.06.30 | 223.79 | இல்லை | |
| 09 | பத்தலன்குண்டு | 2010.11.01 | 291.85 | } வாடகைக்கு வழங்கப்படவில்லை. | | | | |
| 10 | உச்சமுனை | 2010.04.17 | 1096.19 | | | | | |
| 11 | பெரிய ஆரச்சல், | 2012.11.01 | 109.75 | களங் மோட்டர் விலா தனியார் கம்பனி | 2022.10.18 | 109.75 | இல்லை | அதிகார சபையில் முதலீடு தொடர்பான செயல் கைநூல் 0.13.(ஊ) இன் பிரகாரம் முதலீட்டாளர்களினால் தேவையான ஆவணங்களுடன் விண்ணப்பம் முதலீடு தொடர்பான பிரிவிற்கு சமர்ப்பித்து விடுவித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளாமை மற்றும் அதற்காக போதியளவான கவனம் அதிகார சபையின் மூலமும் மேற்கொள்ளாமை. |
| 12 | காக்காதீவு | 2010.11.01 | 67.08 | கெப்பிட்டல் கோப் இன்னடர்நெசனல் தனியார் கம்பனி | 2022.08.29 | 67.08 | | |
| | | | 2056.73 | | | 658.68 | | |

இணைப்பு 04

வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடாத எனினும் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற நிலாவெளி ஹோட்டல் மெனேஜ்மென்ட் தனியார் கம்பனி





வேலை ஆரம்பிக்கப்பட்டு நிறுத்தப்பட்டுள்ள செத் ருமா ஆயுர்வேத ஹோட்டல்.





அதிகார சபையின் காணி ஊடாக அனுமதியற்ற மணல் போக்குவரத்திற்காக அமைக்கப்பட்ட வீதி.



**தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் அதிகாரசபையின் காணியின் நடுவில் நிர்மாணிக்கப்படுகின்ற நுழைவு வீதி.**



காணிப் பகுதிகளில் அனுமதியற்ற வேறு நபர்களினால் கைப்பற்றப்பட்டு உரிமை கோரப்படுகின்ற மற்றும் சில காணிப் பகுதிகளில் அனுமதியற்ற மரத்திலான தூண்கள் நட்டப்பட்டுள்ள முறை.



காணியின் எல்லையை அடையாளப்படுத்துவதற்கு நட்டப்பட்ட கொங்றீட் தூண்கள் சில இடங்களில் இருந்து கழற்றி அகற்றப்பட்டுள்ள முறை.







**இணைப்பு 05**

1. Main entrance to the resort
2. Heli/Pad
3. Stream
4. Spillover basing
5. Public court
6. Beach
7. Extended private beach
8. Dingy pier
9. Tsunami memorial tower
10. Main pedestrian access
11. Performance place with outdoor dining
12. Aquarium
13. Art gallery
14. Performance Art Center
15. Restaurant and tea center
16. SLTDA Office
17. Communication/ Tourists information center and Tsunami warning center
18. Domestic tourist resort
19. Recreation purpose
20. Craft village
21. Hotel bus/car Park
22. Public three Wheeler Park
23. Public Car park
24. Public Bus park
25. Toilet block
26. Changing rooms
27. Hotel sites
28. Access ways to beach
29. Bridge
30. Vehicular road
31. Green belt
32. Pedestrian path
33. Pontoon
34. Sea plane jetty
35. Water tank and sump
36. Sea
37. Sewer treatment plant
38. CEB, Telecom, Medical center and common laundry
39. Collapsible SHELL structure for performance and events
40. Children's park

பாசிக்குடா சுற்றுலா அபிவிருத்தி செயற்திட்டம்

இணைப்பு **06**













சுகாதார நடவடிக்கைகளுக்காக அமைக்கப்பட்டு தற்போது மூடப்பட்டுள்ள கட்டிடம்



06 மாத காலம் முதல் உடைந்த நிலையில் காணப்படுகின்ற பலகைப் பாலம்

